# செம்பியன் கண்டியூர்

## அகழாய்வு அறிக்கை

## (2007 - 2008)

AR732



பதிப்பாசிரியர்
முனைவர் தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இ.ஆ.ப.,
முதன்மை செயலாளர் (ம) ஆணையர்

AR-

தமிழ்நாடு அரசு
தொல்லியல் துறை
சென்னை.

தமிழக அகழாய்வுகள்

# செம்பியன் கண்டியூர்

## (2007 - 08)

பொதுப் பதிப்பாசிரியர் :

முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.,

முதன்மை செயலாளர் (மற்றும்) ஆணையர்

உதவிப் பதிப்பாசிரியர்கள் :

முனைவர் சீ. வசந்தி

ச. செல்வராஜ்

கோ. முத்துச்சாமி

பெ. கௌதமபுத்திரன்

தமிழ்நாடு அரசு

தொல்லியல் துறை

சென்னை.

# உள்ளடக்கம்


| வ.எண். | தலைப்புகள் | பக்க. எண். |
| --- | --- | --- |
| | பதிப்புரை | |
| 1. | முன்னுரை | 7 |
| 2. | செம்பியன் கண்டியூர் இருப்பிடம் மற்றும் வரலாறு | 8 |
| 3. | அகழாய்வுக் குழிகள் | 12 |
| 4. | தொல்பொருட்கள் | 15 |
| 5. | பண்பாட்டுக் காலம் | 18 |
| 6. | பானை ஓடுகள் | 21a |
| 7. | முடிவுரை | 28 |
| | பிற்சேர்க்கை | 29 |
| | காவிரி கரைகளின் மேற்பரப்பு ஆய்வு | |
| | அ. தென்கரையில் | |
| | ஆ. வடகரையில் | |
| | இ. ஆய்வு வரைபடம் | |
| | வரைபடங்கள் | |
| | பாளநிலை | |
| | நிழற்படங்கள் | |

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Tilte | : | **Sembiyan Kandiyur** |
| General Editor | : | **Dr. T. S. SRIDHAR I.A.S.**<br>Principal Secretary & Commissioner |
| Sub-Editors | : | Dr. S. Vasanthi, S. Selvaraj, G. Muthuswamy, P. Gowthamaputhiran |
| Copyright | : | Tamil Nadu State Department of Archaeology |
| Subject | : | Archaeology, Excavation Report |
| Language | : | Tamil |
| Publication No. | : | 209 |
| Year | : | 2008 |
| Type Point | : | 11 pt. |
| No. of Pages | : | |
| Paper used | : | 80 Gsm |
| Price | : | Rs. 80/- |
| Type Setter | : | Gankarani Kaniniyagam<br>Royapettah, Chennai-14. Cell : 98840 57267 |
| Printer | : | TNSDA Press<br>Chennai. |
| Publisher | : | Tamil Nadu State Department of Archaeology<br>Tamil Valarchi Valagam,<br>Halls Road, Egmore,<br>Chennai - 600 008. |

அட்டைப் படம் வடிவமைப்பு : தே. சத்தியவதி அச்சுக்கோர்ப்பாளர்

முனைவர் **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**, இ.ஆ.ப.
முதன்மை செயலாளர் (ம)
ஆணையர்

தொல்லியல் துறை
தமிழ் வளர்ச்சி வளாகம்
எழும்பூர், சென்னை-600 008.

நாள் : 15.4.09

# *பதிப்புரை*

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், செம்பியன் கண்டியூர் என்ற சிற்றூர், குத்தாலத்திலிருந்து திருமணஞ்சேரி செல்லும் வழியில் அமைந்துள்ளது. செம்பியன் கண்டியூரைச் சேர்ந்த ஆசிரியர் புலவர் திரு. வை. சண்முகநாதன், தமது வீட்டுத் தோட்டத்தில் மரம் நடுவதற்குப் பள்ளம் தோண்டியபோது கிடைத்த இரண்டு புதிய கற்காலக் கருவிகளைத் தரங்கம்பாடி, டேனிஷ்கோட்டை அகழ்வைப்பகக் காப்பாட்சியர், திரு. கோ. முத்துசாமி வசம் ஒப்படைத்தார். அக்கருவிகளை ஆய்வு செய்த சிறப்பு ஆணையர் அவர்கள் ஒரு கருவியில் எழுத்துப் பொறிப்புகள் இருப்பதைக் கண்டறிந்தார்கள்.

இவ்வூரில், தொல்லியல் துறையின் தொழில்நுட்ப அலுவலர்கள் அனைவரையும் ஈடுபடுத்திக் கல்வெட்டு முனைப்புத்திட்டத்தின் கீழ் பிப்ரவரி 2006-இல் ஆய்வு தொடரப்பட்டது. ஒரு கைக்கோடாரியில் 3500 ஆண்டுகளுக்கு முற்பட்ட (கி.மு.1500), மொஹஞ்சதாரோ-ஹரப்பா பண்பாட்டுக் கால எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. இச்செய்தியைத் துறையின் ஏப்ரல் மாத திங்கட் பொழிவின்போது (28.4.2006) என்னால் அறிவிக்கப்பட்டது.

எனவே, புதியகற்காலப் பண்பாட்டுத் தமிழக மக்களுக்கும், சிந்து சமவெளி நாகரிக மக்களுக்கும் இடையிலான தொடர்பு, புதிய கற்காலப் பண்பாட்டுத் தமிழக மக்களின் வாழ்க்கை நிலை, ஆகியவற்றை ஆராய்ந்தறியவும், தமிழரின் பண்பாட்டினை, எழுத்துத் தொன்மையினை வெளிப்படுத்தும் நோக்கத்தில் செம்பியன் கண்டியூரில் அகழாய்வு மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு அரசு, செம்பியன் கண்டியூரில் அகழாய்வு மேற்கொள்ள ரூ.3.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தது. இந்திய நடுவண் அரசும் அகழாய்விற்கு அனுமதி அளித்தது.

செம்பியன் கண்டியூர் அகழாய்வுப் பணியில் ஈடுபட்ட அனைத்துத் துறை அலுவலர்களும் பாராட்டுக்குரியோர். தமிழகம், புதிய கற்காலம் மற்றும் சிந்து சமவெளி எழுத்து ஆகியவற்றிற்கான தொடர்பினை அறியும் நோக்கில் இவ்விடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின் அறிக்கை, தமிழ் ஆர்வலர்கள், வரலாறு (மற்றும்) தொல்லியல் ஆய்வாளர்கள், சிந்துசமவெளி எழுத்துக் குறித்து ஆய்வு செய்யும் அறிஞர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறேன்.

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**

# 1. முன்னுரை

தொல்லியல் துறை 2004 செப்டம்பர் மாதம் முதல் துறையில் உள்ள தொழில்நுட்ப அலுவலர்கள் அனைவரையும் ஈடுபடுத்திக் கல்வெட்டு முனைப்புத் திட்டத்தினை செயல்படுத்தி வருகின்றது. அப்போது மேற்கொள்ளப்பட்ட களஆய்வில் ( 2006 பிப்ரவரி) இரண்டு புதிய கற்கால கைக்கோடாரிகள் கண்டெடுக்கப்பட்டன. இவற்றில் ஒன்றில் 3500 ஆண்டுகளுக்கு முற்பட்ட (கி.மு.1500) மொஹஞ்சதாரோ, ஹரப்பா பண்பாட்டுக் கால எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இச்சிறப்பு மிக்க கண்டுபிடிப்பால் காவிரிக்கரையின் இருமருங்கிலும் மேற்பரப்பு ஆய்வு செய்யப்பட்டது.

செம்பியன் கண்டியூரில் கண்டெடுக்கப்பட்ட புதிய கற்கால கைக்கோடாரியில் காணப்பட்ட வரிவடிவங்கள், ஆய்வில் சிந்துவெளி நாகரிக எழுத்துக்களின் வரிவடிவத் தினை ஒத்து இருந்த காரணத்தாலும், இது போன்ற குறியீடுகளுடன் கூடிய புதிய கற்கால கைக்கோடாரி எங்கும் கிடைக்காததால் அதனைப்பற்றி ஆய்ந்தறிய வேண்டி, முதற் கட்டமாக காவிரிக்கரையின் இரு கரையினையும் ஒட்டி அமைந்திருந்த ஊர்களில் கள ஆய்வு செய்யப்பட்டது. இக்கள ஆய்வு, குத்தாலம் ஊராட்சி ஒன்றியம், மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியம், செம்பனார் கோயில் மற்றும் பூம்புகார் ஊராட்சி ஆகிய பகுதிகளில் அமைந்திருந்த ஊர்களில் ஆய்வு செய்யப்பட்டன. இக்கள ஆய்வுகளில் தொல்பொருட்கள் கிடைத்தமையாலும், இப்பகுதிகளின் தொன்மையினை அறியும் பொருட்டும், செம்பியன் கண்டியூரில் அகழாய்வு செய்ய முடிவு செய்யப்பட்டு அகழாய்வு நடத்தப்பட்டது.

செம்பியன்கண்டியூரில் கிடைத்த எழுத்துக் குறியீடுகளுடன் கூடிய புதிய கற்கால கருவி அறிஞர்களிடமும், ஆய்வாளர்களிடமும் தாக்கத்தினை ஏற்படுத்தியதால், தமிழ்நாடு அரசு, உலவளாவிய கருத்தரங்கு ஒன்று நடத்த 2007ஆம் ஆண்டு பிப்ரவரி 15, 16 தேதிகளிள் சிந்துவெளி நாகரிகமும் தமிழர் பண்பாடும் என்ற தலைப்பிலான கருத்தரங்கிற்கு நிதி ஒதுக்கீடு செய்தது. இதில் வாசிக்கப்பட்ட தமிழ் மற்றும் ஆங்கிலக் கட்டுரைகள் 40 நூலாக்கம் பெற்றுள்ளன. சிந்துவெளி தொடர்பான ஆய்வு மேற்கொள்ளும் இளம் ஆய்வாய்வாளர்களுக்கு இந்நூல் பெரிதும் பயன்படும்.

செம்பியன்கண்டியூரில் முறையாக அறிவியல் முறைப்படி அகழாய்வினை 2008-ஆம் ஆண்டு துறையினரால் நடத்தப்பட்டது. இங்கு கள ஆய்வில் தோப்புத் திடல் என்ற பகுதியிலும், படையாட்சித் திடல் என்ற பகுதியிலும் காணப்பட்ட மண்மேட்டுப் பகுதிகளில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது.

# 2. செம்பியன் கண்டியூர் இருப்பிடம் மற்றும் வரலாறு

***அமைவிடமும் தொன்மையும்:***

நாகை மாவட்டம், மயிலாடுதுறை வட்டத்தில் காவிரி ஆற்றின் வடகரையில் குத்தாலத்திலிருந்து இரண்டு கி.மீ. தொலைவில் செம்பியன் கண்டியூர் எனும் சிற்றூர் அமைந்துள்ளது. இவ்வூர் காவிரி ஆற்றின் கிளை நதியான விக்கிரமன் ஆற்றின் மேற்கரையில் அமைந்துள்ளது. எண்.52. வில்லியநல்லூர் எனும் வருவாய் கிராமத்தின் உட்கிராமமாகத் தொன்றுதொட்டு வரலாற்றுச் சிறப்புடன் விளங்கி வருகிறது.

இவ்வூருக்குக் கிழக்கில் இரண்டு கி.மீ. தொலைவில் திருவேள்விக்குடி எனும் ஊர், சங்ககாலத்தியச் சோழப் பெருவழியில் அமைந்துள்ளது.

சோழ அரசி செம்பியன் மாதேவியார் காவிரியின் வடகரையில் உள்ள திருவேள்விக் குடியில் ஒரு சிவன் கோயிலைக் கட்டியுள்ளார். இக்கோயிலில் செம்பியன் மாதேவியாரும், அவர் கணவர் கண்டராதித்த சோழனும் சிவபெருமானுக்கு வேள்வி செய்து, வழிபாடுகள் நடத்தி உள்ளனர். அக்காட்சி கோயிலின் மகா மண்டபத்தில் புடைப்புச் சிற்பமாகக் காட்சி தருகிறது.

மேலும் இக்கோயிலில் 60க்கும் மேற்பட்ட சோழர்காலக் (கி.பி. 8 முதல் 12ஆம் நூற்றாண்டு வரை) கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன. இக்கோயில் கல்வெட்டில்தான் 'செம்பியன் கண்டியூர்' என்ற பெயர் இடம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது. சோழர் காலத்திற்கு முன்புள்ள சான்றுகள் தற்போது அகழாய்வு மூலம் வெளிக் கொணரப்பட்டுள்ளன.

2006-இல் புலவர் வை. சண்முகநாதன் தனது மனையின் பின்புறம் வாழைக்கன்று வைக்கக் குழி தோண்டிய போது மூன்றடி ஆழத்தில் இரண்டு கற்கோடாரிகள் கிடைத்தன. அவைகளை தொல்லியல் துறை தரங்கம்பாடி காப்பாட்சியர் திரு.கோ.முத்துசாமி மூலம் தற்போதைய முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர் (அப்போதைய சிறப்பு ஆணையர்) திரு. தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இ.ஆ.ப. அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இக் கற்கருவியில் உள்ள

தொன்மை எழுத்துக்களை ஆய்வு செய்த பிராமி எழுத்து ஆய்வுப் பேறறிஞர் திரு.ஐராவதம் மகாதேவன் அவர்கள், "இக்கருவி 3000 ஆண்டுகள் பழைமையானது; காவிரிக் கரையில் தமிழரின் தொன்மை நாகரிகம் இதனால் புலனாகிறது. இது சிந்துவெளி நாகரிகத்திற்கு இணையானது" என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

தற்போது அகழாய்வின் மூலம் வெளிக் கொணரப்பட்டுள்ள தொல்பொருட்கள், பெருங் கற்காலத்தைச் சார்ந்தவை என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். குறிப்பாக இங்கு கிடைத்த தொன்மையான பானை ஓடுகளில் பல்வகைக் குறியீடுகள் காணப்படு கின்றன. இக்குறியீடுகள் தமிழின் தொன்மை எழுத்து வடிவமான 'பிராமிக்கு' முற்பட்டது என்று திரு.ஐராவதம் மகாதேவன் அவர்களும், திரு.நடன காசிநாதன் அவர்களும் தத்தமது ஆய்வுக் கட்டுரையிலும் நூலிலும் குறிப்பிட்டுள்ளார்கள்.

எனவே முன்பு கிடைத்த கற்கருவியும் தற்போது நடந்துள்ள அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்களும் காலத்தாலும் தொன்மை வடிவத்தாலும் ஒத்து வருவதை ஆய்வில் உணர முடிகிறது. இதன் மூலம் தமிழர் நாகரிகம் காவிரிக் கரையில் சுமார் 3000ஆண்டு களுக்கு முன்னர் தொன்மைச் சிறப்புடன் விளங்கியது என்பது உறுதியாகிறது.

### *செம்பியன் கண்டியூர் தொன்மை வரலாறு:*

இவ்வூரில் அகழாய்விற்கு முன்னதாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. புலவர் வை. சண்முகநாதனின் வீட்டு மனையின் பின்புறம் ஆய்வு செய்யப்பட்டது. இந்த இடத்தில் மேற்பரப்பில் அதிக அளவில் பானை ஓடுகள் காணப்படுகின்றன. அப்பகுதி மற்ற பகுதியை விட சுமார் ஒரு மீட்டர் உயரமுடைய மண்மேடாக உள்ளது. இப்பகுதியில் சொரசொரப்பான பானை ஓடுகள் அதிக அளவில் காணப்படுகின்றன. இவற்றுடன் கருப்பு சிவப்பு பானை ஓடுகள், கருப்பு பானை மற்றும் சிவப்பு பானை ஓடுகள் ஆகியன கண்டெடுக்கப்பட்டுள்ளன. செம்பியன் கண்டியூரின் மேற்கு பகுதியிலுள்ள இந்த மண்மேட்டின் அருகில் "வடிவுடை அம்மன் கோயில்" என்ற கோயில் ஒன்றும் உள்ளது. அது கி.பி. 15 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்ததாகும்.

**புஞ்சை திடல் :** செம்பியன் கண்டியூரின் மேற்கில், ஒரு கி.மீ. தொலைவில் திரு.எம்.சண்முகம் உடற்பயிற்சி ஆசிரியர் (ஓய்வு) அவர்களின் புஞ்சை திடலில் ஆய்வு செய்யப்பட்டது. இங்கு பெருங்கற்காலத்தைச் சார்ந்த முதுமக்கள் தாழிகள் இருப்பது தெரிய வந்தன.

மேற்பரப்பில் தாழியின் உடைந்த துண்டுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. விவசாயம் பொருட்டு மரக் கன்றுகள் நடுவதற்கு மண் எடுக்கும்போது பல தாழிகள் வெளிப்பட்டதாகத் தெரிகின்றது. இவற்றுடன் கருப்பு சிவப்பு பானை ஓடுகள், கருப்பு பானை ஓடுகள் மற்றும் சிவப்பு பானை ஓடுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இந்த வகை ஓடுகளில் தடித்த ஓடுகளும், பருமன் குறைந்த ஓடுகளும் காணப்படுகின்றன. இப்பகுதியில் பெருங்கற்கால மக்களின்

தாழிகள் மற்றும் சுடுமண் பொருட்கள் மக்கிய எலும்புகள் ஆகியன காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

**ஐயனார் கோயில் திடல் :** மக்கள் வாழ்ந்த பகுதியான இந்த மண்மேடும் சுமார் ஒரு மீட்டர் உயரத்தில் காணப்படுகின்றது. இப்பகுதி பெருங்கற்கால மக்களின் வாழ்விடமாக இருந்துள்ளது. இங்கும் பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய கருப்பு சிவப்பு மட்கலங்களின் ஓடுகள், கருப்பு மட்கலங்களின் ஓடுகள், சிவப்பு மட்கலனின் ஓடுகள் ஆகியன காணப்படுகின்றன. இங்கு கருப்பு மட்கலத்தின் கழுத்துப் பகுதியில் குறியீட்டுடன் கூடிய கிண்ணத்தின் ஒரு பகுதி கிடைத்துள்ளன. இக்குறியீடு இரண்டும் ஒன்றை போல் காணப்படுகின்றன. இதைப்போன்ற குறியீடுகள் மோதூர், கொடுமணல் பூம்புகார் போன்ற அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர் பகுதியில் வல்லம் அகழாய்விலும் கீறல் குறியீடுகள் கிடைத்துள்ளன. இக்குறியீடுகள் பெருங்கற்காலத்தைச் சார்ந்தவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சொரசொரப்பான பானை ஓட்டின் சில்லு ஒன்றும் இப்பகுதியில் கண்டெடுக்கப் பட்டுள்ளது. இச்சில்லு கருப்பு நிறத்தில் காணப்படுகிறது. பெருங்கற்காலத்தைத் தொடர்ந்து இந்த பகுதியில் வரலாற்றுக் காலத்திலும் மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ள வட்ட சில்லும் பிற்காலத்தைச் சார்ந்த பானையின் ஓடுகளும் எடுத்தியம்புகின்றன.

இவ்வூருக்கு அருகே ஓடும் காளி வாய்க்காலின் மேற்கரையில் அமைந்துள்ள இந்த மண்மேட்டில் கி.பி.15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஐயனார் சிற்பம், அவரது இரு தேவியரான பூர்ண, புஷ்கலையுடன் அமர்ந்த நிலையில் காணப்படுகின்றது. இச்சிற்பம் தற்போது வழிபாட்டில் இருந்து வருகின்றது. எனவே, இப்பகுதியில் பெருங்கற்காலத்தி லிருந்து தொடர்ந்து கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரை மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதைத் தெரிந்து கொள்ளமுடிகின்றது.

**அம்மன் கோயில் திடல்:** அம்மன் கோயில் திடல் என்பது வாழ்விடத்துடன் இணைந்து காணப்படுகிறது. இங்கும் மக்கள் வாழ்ந்ததற்கான மட்கலங்களின் ஓடுகளும் தொல்பொருட்களும் கிடைக்கின்றன. இங்கு சுடுமண்ணால் ஆன குழாய் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உடைந்த நிலையிலுள்ள இந்த சுடுமண் குழாய் 19 செ.மீ. நீளம், 11 செ.மீ. விட்டம் கொண்ட வட்ட வடிவ குழாயாகும். இந்த குழாயின் ஒரு பகுதி சிறியதாகவும், ஒரு பகுதி பெரிய அளவிலும், ஒரு குழாயுடன் மற்றொரு குழாய் பொறுத்துவதற்கு ஏதுவாக செய்யப்பட்டுள்ளது. இக்குழாயின் ஒரு பகுதி உடைந்துள்ளது. இக்குழாய் குடிதண்ணீரை எடுத்து செல்ல பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படுகின்றது.

இப்பகுதியில் உடைந்த மிருகத்தின் கால் போன்ற சுடுமண் பகுதி ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது கெட்டியாகவும் உறுதியாகவும் உள்ளது. நீளம் 14 செ.மீ. அகலம் 11 செ.மீ. கொண்டுள்ளது. இதன் தடிப்பு 6 செ.மீ. உள்ளது.

மேற்கண்ட ஆய்விலிருந்து செம்பியன் கண்டியூர் பகுதியில் பெருங்கற்கால மக்களின் வாழ்விடமும் ஈமச் சின்னங்களும் ஒன்றை அடுத்து ஒன்று காணப்படுகின்றன. இதைத் தொடர்ந்து வரலாற்றுக் கால மக்கள் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து வாழ்ந்து வந்துள்ளனர் என்பதும் தெளிவாகின்றது. மேலும் இந்த ஊர் காவிரியின் கிளை நதியான விக்ரமன் ஆற்றின் மேற்கரையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த மண்மேடு பகுதி சுமார் 40 ஏக்கர் பரப்பில் உள்ளதால் இங்கு வரலாற்றுக் காலத்தில் பெரிய நகரமாக இருந்திருக்க வேண்டும் என்பது புலப்படுகிறது.

### *செம்பியன் கண்டியூர் குறுநில மன்னன்:*

செம்பியன் என்றால் மாசற்ற சொக்கத் தங்கம் போன்றவன் என்று பொருள். கண்டியர்கள் சோழர்களிடம் அமைச்சர்களாகவும், படைத்தலைவர்களாகவும், வேளிர் போன்று குறுநில மன்னர்களாகவும் இருந்தவர்கள் ஆவர். எனவே கண்டியர் + ஊர் - என்ற பொருளில் வழங்கிய பகுதி கண்டியூர் என்றாகி செம்பியன் பட்டம் சேர்ந்து "செம்பியன் கண்டியூர்" என்று வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வூரில் அரண்மனையும் சிவன் கோயிலும் அதன் கிழக்கில் அமைந்திருந்த தெருவும் தற்போது அழிந்துவிட்டன. இன்றும் அப்பகுதி, "படையாட்சி தெருத் திடல்" என்று வழங்கப்படுகிறது. பிற்கால சோழர் ஆட்சியின்போது இவ்வூரில் கண்டியூர், ஸ்ரீநக்கன் என்ற குறுநில மன்னன் வாழ்ந்துள்ளான். இவன் கண்டியூரைச் சுற்றியுள்ள 18 ஊர்களுக்கு தலைவனாக விளங்கி இருக்கக்கூடும். அருகில் உள்ள வில்லியநல்லூர் என்பது விற்போர் பயிற்சி பெற்ற வீரர்கள் தங்கியிருந்த இடமாக இருக்கக்கூடும், மேலும் கண்டியூருக்கு மேற்கே உள்ள பெரிய திடலும், பெரிய குளமும் இவ்வீரர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கக் கூடும். செம்பியன் கண்டியூருக்கு தெற்கே 12 கி.மீ. தொலைவில் இவ்வரசன் பெயரால் ஸ்ரீகண்டர்புரம் மற்றும் நக்கம்பாடி போன்ற ஊர்கள் அமைந்துள்ளன என்ற விபரமும் ஆய்வில் புலப்படுகிறது. மூன்றாம் இராசேந்திர சோழ மன்னனின் ஆட்சிக்கு உட்பட்டு இந்த கண்டியூர் ஸ்ரீநக்கன் என்ற குறுநில மன்னன் இப்பகுதியில் ஆட்சி செய்துள்ளான் என்ற விபரமும் சோழர் வரலாற்றின் மூலம் அறிய முடிகிறது.

எனவே செம்பியன் கண்டியூரின் தொன்மைச் சிறப்பினை அறியும் நோக்கில் நான்கு இடங்களில் அகழாய்வுக் குழிகள் போடப்பட்டன. அவைகளில் கிடைத்த அரிய தொல்பொருட்களின் மூலம் காவிரிக் கரையில் மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலத்திலிருந்தே தமிழர்களின் நாகரீகம் சிறப்பாக இப்பகுதியில் இருந்துள்ளதை அறிய முடிகின்றது.

# 3. அகழாய்வுக் குழிகள்

செம்பியன் கண்டியூரில் கிடைத்த இரண்டு புதிய கற்காலத்தைச் சார்ந்த கைக்கோடாரிகள் தொல்லியல் துறையினரின் ஆய்விற்கு கொண்டு வரப்பட்டன. அந்த கைக்கோடாரியில் ஒன்றில் சிந்து சமவெளி நாகரிகத் தொடர்புடைய சித்திர எழுத்துக்கள் அதில் காணப்பட்டதைக் கண்டறிந்தனர். புதிய கற்கால கைக்கோடாரியில் இதுபோன்ற சித்திரக் குறியீடுகள் எங்கும் கிடைக்கவில்லை. இதுவே முதன் முதலான தாகும். இதுபோன்ற குறியீடுகள் பாறை ஓவியங்களிலும், பெருங்கற்கால பானை ஓடுகளில் மட்டுமே காணப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

இப்பகுதி முழுவதும் மேற்பரப்பு ஆய்வு செய்த பின்னர், முறையான அறிவியல் முறைப்படி அகழாய்வு 2008-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இங்கு ஆய்வின்போது கண்டெடுக்கப்பட்ட இரண்டு மண்மேடுகள் தோப்புத் திடல், மற்றும் படையாட்சி திடலில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவை இரண்டும் காவிரியின் கிளை நதியான விக்கிரமன் ஆற்றின் வடகரையில் அமையப்பெற்றுள்ளன.

செம்பியன் கண்டியூரில் நான்கு இடங்களில் அகழாய்வுக் குழிகள் போடப்பட்டன. அவை செ.க.1,2,3,4, (SKR 1,2,3,4) என்று பெயரிடப்பட்டன.

*செ.க. 1* (SKR-I)

இவ்வகழ்வுக்குழி கிராமத்தின் வடக்குப் பகுதியில் அமைக்கப்பட்டது. புலவர் வை. சண்முகநாதன், தமிழ் ஆசிரியர் நிலத்தில் 4 மீ. X 4 மீ. அளவில் கிழக்கு, மேற்காக அமைவது போன்று முதல் அகழ்வுக்குழி குறிக்கப்பட்டது. இந்த அகழ்வுக்குழியில் இரண்டு மண் அடுக்குகள் காணப்பட்டன. மண் தோண்டுவதற்கு எளிமையாகவும், சாம்பல் நிறத்திலும், உடைந்த செங்கற்துண்டுகளும் பானை ஓடுகளும் நிறைந்து காணப்பட்டன. அகழ்வுக் குழியின் தென்பகுதியில் தோண்டுக்குழி ஒன்று இருப்பதையும் குறிக்கப்பட்டது. இவ்வகழ்வுக் குழியில் கருப்பு சிவப்பு பானை ஓடுகள், பளபளப்பான சிவப்புநிறப் பானை ஓடுகள், கருப்பு பானை ஓடுகள், சொரசொரப்பான சிவப்பு நிற, பானை ஓடுகள் அதிக அளவில் சேகரிக்கப்பட்டன.

இக்குழியில் தொல்பொருட்களாக உடைந்த சுடுமண் கைப்பிடி ஒன்றும், இரும்பு வளையம், இரும்பு ஆணி, பானை ஓடுகளால் செய்த வட்டுக்கள், சில வேலைப்பாடு களுடன் கூடிய பானை ஓடுகள் மற்றும் குறியீடுகள் கீறப்பட்ட பானை ஓடுகளும் சேகரிக்கப்பட்டன.

இரண்டாவது மண் அடுக்கில் மண் சற்று கடினமாகவும், களிமண் கலந்தும் மஞ்சள் நிறத்துடனும் காணப்பட்டது. ஒரு முழுமையான சிறிய பானை ஒன்று கிழக்குப்பகுதியில் இரண்டாவது மண் அடுக்கில் 1.10 மீ. ஆழத்தில் கண்டறியப்பட்டு ஆய்வு செய்து வெளிக்கொணரப்பட்டது. இந்த மண் அடுக்கிலும் கருப்பு சிவப்பு, கருப்பு வழவழப்பான சிவப்பு போன்ற பானை ஓடுகள் கிடைத்தன. இந்த மண் அடுக்கின் தடிப்பு 0.80மீ. மொத்த ஆழம் 1.65 மீ. ஆகும். கன்னி மண் பகுதி வரை ஆய்வை மேற்கொள்ளப்பட்டது.

## செ.க. - 2 (SKR 2)

அகழ்வுக் குழி இரண்டு ஊரின் வட மேற்கில் திரு.சண்முகம் உடற்பயிற்சி ஆசிரியர் (ஓய்வு) புஞ்சை நிலத்தில் 4மீ X 4 மீ அளவில் போடப்பட்டது. இப்பகுதியினை தோப்புத் திடல் என்று அழைக்கின்றனர். இங்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வகழ்வுக் குழியிலும் இரண்டு மண் அடுக்குகளே காணப்பட்டன.

மண் கடினமாகவும், களிமண் கலந்தும் காணப்பட்டது. இந்த அகழ்வுக் குழியில் 8 முதுமக்கள் தாழிகள் காணப்பட்டன. இவை ஒவ்வொன்றையும் முறையாக ஆய்வு செய்து வெளிக்கொணரப்பட்டது. இந்த மண் அடுக்கு 1.70 மீ. ஆழம் வரை சென்றது. முதுமக்கள் தாழி அமைந்துள்ள மண் அடுக்கு மொத்த தடிப்பு 1.20 மீ. பெரும்பாலான முதுமக்கள் தாழிகள் உடைந்தே கிடைத்துள்ளன. உருண்டையான பானை, கும்ப அமைப்பில் குவிந்த பானை, அகலமான தொட்டி அமைப்பில் பானை என விதவிதமான அமைப்பில் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது ஆகும். இவற்றில் இரண்டு முதுமக்கள் தாழிகள் மட்டும் அதன் வாய்ப்பகுதியில் அகன்ற மூடி கொண்டு மூடப்பட்ட நிலையில் காணப்பட்டது. இவற்றின் ஒரு பகுதியும் உடைந்து இருந்தது. இந்த அகழ்வுக்குழியில் தான் அதிக அளவு முழுமையான பானை, தட்டு, குடுவை, குவளை, கிண்ணம் போன்றவை சேகரிக்கப்பட்டன. கால்கள் கொண்ட ஜாடியும் காணப்பட்டன. இந்த முதுமக்கள் தாழியில் கருப்பு சிவப்பு பளபளப்பான சிவப்பு, சொரசொரப்பான சிவப்பு நிற பானை ஓடுகள் கலந்து காணப்பட்டன. சிவப்பு நிற பானை ஓடுகள் சாதாரண மண் கொண்டும், சிறிய அளவிலும் செய்யப் பட்டுள்ளதைக் காண முடிந்தது. இவற்றில் ஸ்வஸ்திகா குறியீடு கீறல்கள் அதிக அளவில் கிடைத்துள்ளன. இவற்றில் குறிப்பாக உடுக்கை, முக்கோண வடிவம், இரண்டு முக்கோணங்கள் ஒன்றையொன்று தொட்டுக் கொண்டுள்ளது போன்றும் கிடைத்துள்ளன.

இவை அனைத்தும் குயவன் சக்கரங்கள் கொண்டு வனையப்பட்டவைகளாகும். இங்குள்ள மண்ணின் தன்மையைக் கொண்டு பார்க்கும்பொழுது இவை பளபளப்பு தன்மை குறைந்தும், விரைவில் உடையும் வகையிலும் அமைந்துள்ளது எனத் தெரிகின்றது. இங்குக் காணப்படும் பானை ஓடுகள் தரத்தால் குறைந்து அமைந்துள்ளதை உணர்த்துகின்றன.

முதுமக்கள் தாழி, தானியம் சேகரிக்கும் பானை, நீள் உருளை ஜாடி, அகன்ற தொட்டி, உருண்டையான பானை போன்றவற்றுடன் பல ஒட்டு வட்டச் சில்லுகள் மற்றும் இரும்பு ஆணிகள் போன்றவை அகழாய்வில் சேகரிக்கப்பட்டன.

## *செ.க. 3* (SKR - 3)

அகழ்வுக் குழி செ.க. - 3, உள்ளூர் தெருவின் அருகே அகழப்பட்டது. இதன் வழியாக செ.க.-2 அகழ்வுக் குழியைச் சென்றடையலாம். இந்த நிலம் திரு.முத்தப்பா என்பவரின் வீட்டு மனைக்கு பின்புறம் அமைந்துள்ளது. மண் சற்று கடினமாகவும், பழுப்பு நிறத்திலும், அதிக அளவு பானை ஓடுகளும் இக்குழியில் காணப்பட்டன. இங்கும் முதன்மை வகிக்கும் பானை ஓடுகள் கருப்பு சிவப்பு, கருப்பு, சிவப்பு நிறமான பானை ஓடுகளே ஆகும். தொல்பொருட்களாக வட்டுச் சில்லுகள், இரும்பு ஆணிகள் போன்றவை கிடைத்துள்ளன. 1.30 மீ. ஆழத்தில் உடைந்த புதிய கற்காலக் கைக்கோடாரி ஒன்றும் கிடைத்துள்ளது. இவற்றுடன் குறியீடுகள் கீறப்பட்ட பானை ஓடுகளும் சேகரிக்கப்பட்டன. இரண்டாவது மண் அடுக்கிலும் மண் தொடர்ந்து கடினமாகவும், களிமண் கலந்து சற்று மஞ்சள் கலந்த நிறத்திலும் காணப்பட்டது. இந்த மண் அடுக்கில் பானை ஓடுகள் குறைந்து காணப்பட்டன. இங்கு 1.45 மீ. ஆழம் வரை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## *செ.க. 4* (SKR - 4)

இந்த அகழ்வுக் குழி ஊரின் நுழைவு வாயிலில் காணப்படும் வளைவிற்கு அருகே அமைக்கப்பட்டது. இப்பகுதியைப் “படையாட்சி திடல்” என அழைக்கின்றனர். மண் கடினமாகவும், களிமண் கலந்தும் காணப்பட்டது. குறைந்த அளவு பானை ஓடுகளுடன் சில உடைந்த முதுமக்கள் தாழியின் பகுதிகளும் கிடைத்தன. கைவிரல் ஆழத்தைக் கொண்டு அலங்கரித்த பானை ஓடுகள், பானை மூடிகள் கிடைத்துள்ளன. பானை ஓட்டின் விளிம்பின் கீழ்ப்பகுதியில் இதுபோன்ற வேலைப்பாடுகள் காணமுடிகின்றது. இங்கும் கருப்பு சிவப்பு மற்றும் கருப்பு, சிவப்பு பானை ஓடுகள் காணப்பட்டன. சிறிய பானைகள், அகன்ற வாயமைப்பு கொண்ட பானை, சுடுமண் வட்டத்தாங்கிகளும் உடைந்த நிலையில் காணப்பட்டன. இரண்டாவது மண் அடுக்கில் ஒரு சில பானை ஓடுகளே கிடைத்தன. இங்கு குறிப்பிடும்படியான தொல்பொருட்கள் வட்டுச் சில்லு, வேலைப்பாடுடன் கூடிய மக்கிய எலும்புத் துண்டுகள், பானை ஓடுகள், மட்டுமே கிடைத்துள்ளன. இவ்வகழ்வுக் குழியின் ஆழம் 1.55 மீ. வரை சென்றுள்ளது.

# 4. தொல்பொருட்கள்

செம்பியன் கண்டியூர் அகழாய்வில் அதிக அளவில் பானை ஓடுகளும், குறியீடுகள் பொறித்த பானைகளும் கிடைத்துள்ளன. இவற்றை பானை ஓடுகள் என்ற தலைப்பிலும் குறியீடுகள் என்ற தலைப்பிலும் விரிவாக வழங்கப்பட்டுள்ளன. இதனைத் தவிர்த்து ஏனைய தொல்பொருட்களாக சுடுமண் வட்டுகள், சுடுமண் மூடியின் குமிழ்கள், சுடுமண் தாங்கி மற்றும் சில இரும்பு பொருட்கள் மட்டுமே கிடைத்துள்ளன. இக்கால மக்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்திய பிற தொல்பொருட்கள் ஏதும் அகழாய்வு செய்யப்பட்ட இடங்களில் காணப்படவில்லை. பானைகளும், பானை மூடிகளும் குறியீடு பொறித்தவைகளும் மட்டுமே அதிக அளவில் காணப்படுவதை கொண்டு இப்பகுதி மக்கள் விவசாயத்தையே முழுநேரத் தொழிலாக கொண்டிருந்தனர் என அறிய முடிகின்றது.

## இரும்பு பொருட்கள்:

இங்கு மேற்கொண்ட அகழாய்வுக் குழிகளில் இரும்பு வளையம் ஒன்றும், இரும்பு கத்தி ஒன்றும் மிகவும் சிதைந்த நிலையில் கண்டு எடுக்கப்பட்டது. இவை பெருங்கற்கால பண்பாட்டுக்காலத்தைச் சார்ந்தவை என்பதை அவற்றுடன் இணைந்து கிடைத்த பானை ஓடுகள் உறுதி செய்கின்றன. இரும்பு கத்தி உடைந்த நிலையில் சேகரிக்கப்பட்டுள்ளது. பெருங்கற்காலத்தில் மக்கள் இரும்பின் பயன்பாட்டை அறிந்தும், பயன்படுத்தியும் வந்துள்ளனர் எனத் தெரிகின்றது. எனவே தான் பெருங்கற்காலத்தை இரும்புக் காலம் என்றும் தொல்லியல் ஆய்வாளர்கள் குறிப்பர். பெருங்கற்காலப் பண்பாட்டு வகையைச் சேர்ந்த அகழாய்வுகளில் தமிழகத்தில் பெரும்பான்மையான இடங்களில் அதிக அளவில் இரும்புப் பொருட்கள் கிடைத்துள்ளன.

## சுடுமண் பொருட்கள் :

பண்டைய தமிழகத்தில் மக்கள் பயன்படுத்திவிட்டுச் சென்ற சுடுமண் பொருட்கள், சுடுமண் பொம்மைகள், தமிழ்நாட்டில் நடைபெற்ற அகழாய்வு குழிகளில் கிடைக்கப் பெற்று வருகின்றது. இந்தச் சுடுமண் உருவங்களும், பொருட்களும், புதிய கற்காலம் முதல் மக்கள் பயன்படுத்தியுள்ளனர். கோவை மாவட்டம் போளுவாம்பட்டி, விழுப்புரம் மாவட்டம் சேந்தமங்கலம், இராமநாதபுரம் மாவட்டம், அழகன் குளம் போன்ற அகழாய்வு குழிகளில் குறிப்பிட தகுந்த சுடுமண் பொம்மைகள் மற்றும் பொருட்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதுபோன்ற சுடுமண் பொருட்கள் செம்பியன் கண்டியூர் அகழாய்வு குழிகளிலும் கிடைக்கப் பெற்றுள்ளன.

### *சுடுமண் குமிழ் கைப்பிடி* (Knobs) *மூடிகள்* (Lids)

செம்பியன் கண்டியூர் அகழாய்வு குழிகளில் குறிப்பிடத்தகுந்த சுடுமண் குமிழ் கைப்பிடிகள், மூடிகள் (Lids) கிடைக்கப்பெற்றுள்ளன. மக்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் தண்ணீர் சேமித்து வைக்க இவற்றைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை உணர முடிகின்றது.

இந்த இரண்டு சுடுமண் பொருட்கள் இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் 1 முதல் 3 வரை உள்ள அகழாய்வுக் குழிகளில் கிடைக்கப்பெற்றுள்ளன. இவை கருப்பு நிற (All Black ware) பானைகளில் செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற சுடுமண் பொருட்கள் போளுவாம்பட்டி சேத்தமங்கலம், தேரிருவேலி, கொடுமணல் ஆகிய அகழாய்வு குழிகளில் கிடைக்கப்பெற்றுள்ளது குறிப்பிட தகுந்தவையாகும்.

### *சுடுமண் வட்டச் சில்லு:*

அகழாய்வுகளில் பெரும்பான்மையான ஆய்வுகளில் அதிக அளவில் காணப்படுவது சுடுமண் வட்டச் சில்லுகளே ஆகும். 2 செ.மீ. விட்டம் உள்ள சிறியவைகள் முதல் 5 செ.மீ. விட்டம் உள்ள பெரியவைகள் வரை செம்பியன் கண்டியூரில் சேகரிக்கப் பட்டுள்ளன. விளையாட்டிற்கு பயன்படுத்தப்பட்டவை என்றும் குறிப்பர். சங்க இலக்கியங்களில் பெண்கள் கட்டம் கட்டி வட்டச் சில்லுகளை விட்டெறிந்து விளையாடும் விளையாட்டைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. இந்த வட்டச் சில்லுகளும் அத்தகைய பயன்பாட்டிற்குரியது எனவும் கருதலாம். அதிக அளவில் கிடைப்பதால் இதனை எடைக் கற்களாகவும் பயன்படுத்தியிருத்தல் கூடும் என்றும் சில தொல்லியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

### *சுடுமண் தாங்கி* (Dish on stand):

தமிழகத்தில் நடைபெற்ற அகழாய்வு குழிகளில் பெருங்கற்காலத்தைச் சார்ந்த சுடுமண் தாங்கிகள் மிகுதியாக கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த சுடுமண் தாங்கிகள் மேற்பரப்பு கள ஆய்வுகளில் தமிழகத்தில் ஏராளமாக கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த வகையான சுடுமண் தாங்கி செம்பியன் கண்டியூர் அகழாய்வு குழிகளிலும் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த சுடுமண் தாங்கி கருப்பு சிவப்பு (Black and redware) பானை ஓடு இனத்தைச் சாந்தவையாகும்.

### *சுடுமண் கிண்ணம்* (Bowls):

சுடுமண் மட்கலன்கள், சுடுமண் கிண்ணங்கள் தொன்மை காலமாகவே, அனைத்து பிரிவு மக்களாலும் பயன்படுத்தி வரப்பட்டுள்ளது. செம்பியன் கண்டியூர் அகழாய்வு குழிகளில் வெவ்வேறு வடிவிலும், அளவிலும் சுமார் 25 வகை சுடுமண் கிண்ணங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த சுடுமண் கிண்ணங்கள் யாவும் கருப்பு சிவப்பு (Black and

Red ware) வகையைச் சார்ந்த சுடுமண் கிண்ணங்களாகும். இந்த சுடுமண் கிண்ணங்கள் வழவழப்பாகவும், மிகவும் நேர்த்தியாகவும், முழுமையானதாகவும் சில உடைந்தும் கிடைக்கப் பெற்றுள்ளன.

### *புதிய கற்கால கைக்கோடாரி:*

உடைந்த நிலையில் சிறிய அளவிலான புதிய கற்காலக் கைக்கோடாரி ஒன்று அகழ்வுக் குழி மூன்றில் எடுக்கப்பட்டது. இவை பெருங்கற்காலப் பண்பாட்டு பானை ஓடுகளுடன் இணைந்து கிடைத்துள்ளன. இவற்றை ஒப்பு நோக்கும் பொழுது இந்த கைக்கோடாரி தங்களது முன்னோர்களின் நினைவாக வைத்து வழிபட்டு வந்ததின் எச்சமாகக் கருத முடிகின்றது. இந்த புதிய கற்காலக் கைக்கோடாரி ஓர் கல்ஆயுதமாக பயன்படுத்தப்படவில்லை. பெருங் கற்காலத்தில் வழிவழியாக வந்த மக்கள் தங்களது மூதாதையர் பயன்படுத்திய பொருட்களை வைத்துப் போற்றி வணங்கி வருவது வழக்கம். அதனடிப்படையில் இந்த புதிய கற்காலக் கைக்கோடாரியும் இங்கு வாழ்ந்த பெருங்கற்கால மக்கள் பயன்படுத்தி இருத்தல் வேண்டும்.

மேலும் தமிழகத்தில் நடைபெற்ற பெருங்கற்காலப் பண்பாட்டைச் சார்ந்த அகழாய்வுகளில் மாங்குடி, கோவலன் பொட்டல், பெரும்பேர், ஆண்டிப்பட்டி போன்ற அகழாய்வுகளிலும் முதுமக்கள் தாழிகளில் புதிய கற்காலக் கைக்கோடாரிகள் கிடைத்துள்ளன.

# 5. பண்பாட்டுக் காலம் பகுப்பு முறைகள்

தமிழகத்தில் பொதுவாக தென்னிந்தியாவிலும் பல அகழாய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அவற்றில் வரலாற்றுக்கு முற்பட்ட மக்களின் வாழ்க்கைநிலை எவ்வாறு அமைந்துள்ளது என்பதை ஆங்காங்கே கிடைத்த தொல்பொருட்களைக் கொண்டு உணர முடிந்தது. அவ்வாறு கிடைத்த பொருட்களை ஆய்வு செய்தும், அதே பொருட்கள் சம காலத்தில் பிற இடங்களில் கிடைத்த தொல்பொருட்களோடு ஒப்பீட்டு ஆய்வு செய்தும் அவை எந்த காலக்கட்டங்களைச் சேர்ந்தது என கால நிர்ணயம் செய்ய இயலும்.

செம்பியன் கண்டியூரில் நான்கு அகழ்வுக் குழிகள் போடப்பட்டன. ஆயினும் தோப்புத் திடல் மற்றும் படையாட்சி திடல் ஆகிய இரண்டு மண் மேடுகளையும் இக்கிராமத்தில் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மூன்று அகழ்வுக் குழிகள் படையாட்சி திடலை ஒட்டிய சுற்றுப் பகுதியிலும் ஒன்று மட்டும் தோப்புத் திடலிலும் அமைக்கப்பட்டது.

இந்த அகழாய்வு மூலம் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்கள், பானை ஓடுகள், குறியீடு கீறல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொண்ட ஒப்பீட்டு ஆய்வில் ஒரே ஒரு பண்பாட்டுக் கால மக்கள் மட்டுமே இங்கு வாழ்ந்து சென்றுள்ளதை உணர்த்துகின்றது. இங்கு ஒரு உடைந்த புதிய கற்கால கைக்கோடாரி ஒன்றும் கிடைத்துள்ளது.

மேற்குறித்த தொல்பொருட்களின் அடிப்படையில் இப்பகுதியில் ஒரே காலகட்டத் தைச் சார்ந்த அதாவது, பெருங்கற்கால பண்பாட்டு வகையைச் சேர்ந்த ஓர் இனமக்கள் மட்டுமே இங்கு தங்கி வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவாகின்றது. இங்கு காணப்படும் பெருங்கற்கால மக்களின் வாழ்விடப் பகுதிகளையும், இடுகாட்டுப் பகுதியையும் நன்கு அகழ்ந்து மேற்கொண்ட ஆய்வில் கிடைத்த தொல்பொருட்கள் இவற்றை உறுதி செய்கின்றது.

அகழ்வுக் குழி செ.க. 2-ல் எட்டு முதுமக்கள் தாழிகள் வெளிக் கொணரப்பட்டன. இவை பெருங்கற்கால பண்பாட்டு வகையைச் சார்ந்த அதன் தொடர்புடைய சான்றுகளாகும். அடுத்து காணப்பட்ட அகழாய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட செ.க. 3 மற்றும் செ.க. 4 ஆகிய அகழ்வுக் குழிகள் வாழ்விடங்களாகக் காணப்பட்டன.

இவை அனைத்தும் பெருங்கற்கால பண்பாட்டை முன்னிறுத்துவதாகவே கிடைத்துள்ள சான்றுகள் தெரிவிக்கின்றன. பெருங்கற்கால பண்பாட்டின் மையத் தொழிலாக அமைந்தது, பானைகள் வனைவது ஆகும். அவற்றில் குறிப்பிடத் தக்க பானை ஓடுகளான கருப்பு சிவப்பு, கருப்பு, சிவப்பு, பளபளப்பான சிவப்பு மற்றும் சொரசொரப்பான சிவப்பு பானை ஓடுகள் அனைத்தும் பெருங்கற்கால பண்பாட்டினைச் சார்ந்தது என்பது செம்பியன் கண்டியூர் அகழாய்வின் மூலம் உறுதி செய்யப்படுகின்றது.

இங்கு பிற்காலத்தில் விவசாயத்தினால் முதுமக்கள் தாழிகள் பல சிதைக்கப் பட்டுள்ளன. இந்த முதுமக்கள் தாழிகள் சிறியது முதல் பெரியதும் ஆன சால்வகைப் பானைகள், தட்டு, குவளை, கிண்ணம், குடுவை, விளக்குகள் போன்றவைகள் கிடைத்துள்ளன. இவற்றுடன் இரும்பு கத்தி, எலும்பு துண்டுகள், சுடுமண் தாங்கிகள் போன்றவைகளும் கிடைத்துள்ளன. சில தாழிகளை மூடப் பயன்படும் மூடிகளின் விளிம்புகள் கை விரலை அழுத்தி (nail impression) அதனால் உண்டாகும் அலங்கரிப்புடன் கூடியவையும் கிடைத்துள்ளன. இவ்வாய்வில் சுமார் 29 குறியீட்டு கீறல்கள் கொண்ட பானைகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

எனவே கிடைத்துள்ள பானை ஓடுகள், தொல்பொருட்கள் குறியீட்டுப் பானை ஓடுகள் இவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு செம்பியன் கண்டியூர் அகழாய்வினை காலப்பாகுபாடு செய்யலாம்.

***பண்பாடு -1 கி.மு. 500 முதல் கி.பி. 300 வரை***

இதன் தொடர்ச்சியான பிற பண்பாட்டுக் காலங்கள் இப்பகுதியின் அகழாய்வில் ஏதும் காணப்படவில்லை.

தொல்பொருட்களின் அடிப்படையில் இங்கு வாழ்ந்த மக்கள் விவசாயத்தையே தங்கள் முதன்மை தொழிலாகக் கொண்டிருந்தனர். ஒரு பகுதி மக்கள் மட்டும் பானைகள் தயாரிப்பதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இங்கு கிடைத்துள்ள பானை ஓடுகள் மண்ணில் தரத்தாலும், சுடப்படும் முறையிலும் இவை தனித்து காணப்படுகின்றன.

ஒரு உடைந்த புதிய கற்காலக் கைக்கோடாரி ஒன்று சேகரிக்கப்பட்டது. இது பெருங்கற்கால மக்கள் இதனைக் கைக்கோடாரியாகவோ அன்றி, வேட்டையாடுதலுக் காகவோ, கல் ஆயுதமாகப் பயன்படுத்தியிருக்கக்கூடும். இதனைத் தங்களது மூதாதையரின் நினைவுச் சின்னமாக வைத்து வழிபடும் நோக்கத்திற்காகவே, இக்கைக் கோடாரி இங்கு வைக்கப்பட்டிருக்கக்கூடும். மேலும் ஒப்பீட்டு ஆய்வு மேற்கொள்ளும்பொழுது பெருங்கற்கால பண்பாட்டுக் காலத்தில் முதுமக்கள் தாழி அல்லது வாழ்விடங்களில் ஆங்காங்கே அகழாய்வில் ஒன்று அல்லது இரண்டு புதிய கற்காலக் கைக்கோடாரி கிடைப்பது வழக்கம். பல பெருங்கற்கால இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில்

புதிய கற்காலக் கைக்கோடாரிகள் நமக்கு இவை கிடைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

பெருங்கற்கால பண்பாடு என்பது பெருங்கற்களைக் கொண்டு அமைக்கும் இடுகாட்டு அறைகளின் அமைப்பு முறையைக் கொண்டே இப்பெயர் அமைந்தது. அதனடிப்படையில் முதன்முதலில் தோன்றியவை கற்பலகைகளைக் கொண்டு அமைத்த கல்லறையும், கிழக்கே காணப்படும் வட்டமான இடுதுளையும் கட்டிய பெருங்கற் சின்னங்கள் காலத்தால் முற்பட்டவை ஆகும். இதனை இரும்புக் காலம் என்றும் குறிப்பர். தமிழகத்தில் இதன் காலத்தை கி.மு. 1000 என அறிஞர்கள் கால நிர்ணயம் செய்துள்ளனர்.

இதன் தொடர்ச்சியாகவே பிற வகை பெருங்கற்கால பண்பாட்டுச் சின்னங்கள் தமிழகத்தில் பின்னர் நுழைந்தன. ஆனால் ஒட்டுமொத்தமாக பிற பெருங்கற்கால பண்பாட்டுச் சின்னங்கள் அனைத்தும் கி.மு. முதல் நூற்றாண்டிற்கு முன்னரே வந்து விட்டது என்றும் அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். முதுமக்கள் தாழி வகைகள் கொண்ட பண்பாட்டு எச்சங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழகத்தில் தோன்றி சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன என்பதை பல அகழாய்வுகள் மூலம் வெளிக் கொணரப்பட்டுள்ளன.

செம்பியன் கண்டியூரில் அகழாய்வு மூலம் வெளிக்கொணரப்பட்ட முதுமக்கள் தாழி வகைகள் மற்றும் அவர்களின் வாழ்விடங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இதன் காலத்தை கி.மு.500 முதல் கி.பி.300 வரையிலான காலகட்டத்தைச் சேர்ந்தவை எனக் கருதலாம்.

### *பானை ஓடுகள்:*

அகழாய்வில் கிடைக்கும் பானை ஓடுகள் ஓர் இன்றியமையாத சான்றாகவும், மக்களின் அன்றாட வாழ்க்கைத் தரத்தையும், சமுதாய நிலையையும் தெளிவாக வெளிக்காட்டும் காலக் கண்ணாடியாகவும் திகழ்ந்து வருகின்றன என்பதில் ஐயமில்லை. இவை அக்காலப் பகுப்பை முறைப்படுத்தவும், வரலாற்றை ஒருங்கிணைக்கவும், அந்தந்த பகுதி சமுதாயத்தை ஒருமைப்படுத்தவும் துணை புரிகின்றன.

இலக்கியச் சான்றுகள் காணப்படாத நிலையில் பானை ஓடுகளின் மூலம் அவை பயன்படுத்தப்பட்ட சமுதாயங்களின் அடிப்படைத் தரத்தை நிர்ணயிக்க முடிகின்றது. பல்வேறு இடங்களிலும், பல்வேறு கால கட்டத்தில் இதன் தனித்தன்மை ஒரு சிறப்பான பங்கு வகித்துள்ளது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மக்கள் பயன்படுத்திய இந்த பானை வகைகள்தான் அம்மக்களின் சமுதாய, பொருளாதார வளர்ச்சியை அறிவதற்குப் பெரும்பங்காற்றியுள்ளன. இந்தப் பானை ஓடுகள்தான், இவற்றைப் பயன்படுத்திய மக்கள் உயர்ந்த பொருளாதாரத்தில் உள்ளவர்களா அல்லது பொருளாதாரத்தில் பின்தங்கிய வர்களாக இருந்துள்ளார்களா என்பதையும் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

செம்பியன் கண்டியூரில் பெருங்கற்காலப் பண்பாட்டு வகையைச் சார்ந்த பானை ஓடுகளே அதிகம் கிடைத்துள்ளன. அவையாவன கருப்பு சிவப்பு, கருப்பு, சிவப்பு,

சொரசொரப்பான சிவப்பு பானை ஓடுகள் என்பனவாகும். இவை பல்வேறு வடிவில் கிடைத்துள்ளன. பெரும்பாலும் கருப்பு, சிவப்பு பானை ஓடுகள் அளவில் சிறியதும் விளிம்புகளற்றதுமாகக் காணப்படும். இவற்றை மேசையில் வைக்கப் பயன்படுத்தும் சிறிய வகைப் பானைகள் எனப்பகுப்பர். சொரசொரப்பான பானைகள் விளிம்பு தடித்து வெளியே புடைத்தும் பிடிப்பதற்கு ஏற்ப வளைந்த விளிம்புடன் அமைப்பர். இவை ஓரிடத்தில் இருந்து வேறு ஒரு இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கு ஏற்ப அமைப்பர். இவை தடிப்பாகவும் அமைப்பில் பெரியதாகவும் காணப்படும். வட்டமான பெரியவகைப் பானைகள், சேமித்து வைக்கும் பயன்பாட்டிற்காக வனையப்பட்டிருக்கக்கூடும்.

### *கருப்பு, சிவப்பு பானைகள்:*

பெருங்கற்கால பண்பாட்டில் பெரும்பங்கு வகிப்பது கருப்பு, சிவப்பு பானை ஓடுகளே. இது உள்ளே கருப்பாகவும், வெளியே சிவப்பாகவும் காணப்படும். இவைகளை கவிழ்த்து வைத்து சுடுவதனால் ஏற்படும் நிற மாற்றங்கள் ஆகும். பெரும்பாலும் கருப்பு சிவப்பு பானைகள் அளவில் சிறிதான குவளை, தட்டு, குடுவை, கிண்ணம், தாங்கி போன்றவைகளாகும். பெரும்பாலும் விளிம்புகள் முனையற்றதாகவும், உள்வாங்கிய வளைவுகள் கொண்டும் காணப்படும். நல்ல களிமண் கொண்டு சக்கரத்தால் சுழலப்பட்டு செய்யப்பட்ட பானைகள் ஆகும். உட்புறமும், வெளிப்புறமும் நன்கு சுடப்பட்டு, பளபளப்பான மெருகேற்றிய நிலையில் இவை காணப்படுவதே இதன் சிறப்பாகும்.

### *கருப்பு சிவப்பு பானை ஓடுகள்: (பக்கம்* 19A - 19E*)*

1. அரை வட்ட வடிவ கிண்ணம், நீண்ட கழுத்துப்பகுதி, உள்வாங்கிய வளைவு கொண்ட விளிம்புடையவை.
2. ஆழமற்ற அகன்ற தட்டு, தடிப்பான மணி போன்ற உருண்டை விளிம்பு கொண்டவை.
3. கூர்மையான நீண்ட விளிம்பு கொண்ட பானை. இதன் விளிம்பில் மூன்று கோடுகள் செல்வது போல வனையப்பட்டவை.
4. அரைவட்ட வடிவ கிண்ணம், நீண்ட கழுத்தும், விளிம்பற்ற நிலையில் அமைந்தவை.
5. உள்வாங்கிய விளிம்பு கொண்ட அரைவட்ட வடிவ கிண்ணம்.
6. கூர்மையான விளிம்புடைய அரைவட்ட வடிவ குவளை.
7. விளிம்பற்ற அரைவட்ட வடிவ கிண்ணம், சிறியதான அளவில் விளிம்பு உள்வாங்கி வளைந்து காணப்படுபவை.
8. கூர்மையான விளிம்புடைய அரைவட்ட வடிவ கிண்ணம்.
9. சற்று வெளிப்புறம் வளைந்த தடித்த கிண்ணம்.

# கருப்பு சிவப்பு பானைகள்

## BLACK AND REDWARE




5
6
7
8
9
10


11
12
13
14
15


16
17
18
19


20
21
22
23

# கருப்பு வண்ண பானை ஓடுகள்

## ALL BLACK WARE




5
6
7
8


9
10
11
12

# சிவப்பு வண்ணப் பானை ஓடுகள்

## RED SLIPPED WARE




5
6
7
8
9

10. வெளிவளைந்த சிறிய விளிம்புடைய கிண்ணம்.

11. அரைவட்ட வடிவ பானை, தடித்த விளிம்புடையவை.

12. வட்டமான தட்டு, உருண்டையான மணி போன்ற விளிம்புடையவை.

13. ஆழமான கிண்ணம், தடித்த வெளிவளைந்த விளிம்புடையவை.

14. அரைவட்ட வடிவ, விளிம்பற்ற கிண்ணம், சற்று வெளிவளைந்த தோற்றம்.

15. உள்வளைந்த அரைவட்ட வடிவ கிண்ணம், மெதுவான விளிம்புடையவை.

16. கூர்மையான வெளிவளைந்த விளிம்புடைய கிண்ணம்.

17. உட்பகுதியான கழுத்துப்பகுதி கொண்ட பானை, கோடுகளுடைய தடித்த விளிம்பு கொண்டவை. தோல்பட்டையில் மூன்று கோடுகள் செல்கின்றன.

18. நீண்ட கழுத்துடைய, மழுங்கிய விளிம்புடைய கிண்ணம்.

19. ஆழமான அகன்ற கிண்ணம், கூர்மையான விளிம்புடையவை.

20. வட்டவடிவமான பாத்திரம், மணி போன்ற அமைப்புடைய விளிம்பு, தோல்பட்டையில் ஆழமான இரண்டு கோடுகள் செல்கின்றன.

21. வட்டமான உள்வாங்கிய விளிம்புடைய தட்டு.

22. வட்டமான உள்வாங்கிய விளிம்பு கொண்ட மூடி.

23. வட்டமான உள்வாங்கிய விளிம்புடைய மூடி.

***கருப்பு பானை ஓடுகள்:*** ***(பக்கம்*** 18F - 18H***)***

கருப்பு நிற பானை ஓடுகள் முழுவதும் கருப்பு நிறத்தில் காணப்படும். இவைகளும் சக்கரத்தால் வனையப்பட்டவை. நன்கு ஒளிரும் பளபளப்பான தன்மை கொண்டவை. இந்த பானைகள் பெரும்பாலும் தடித்த விளிம்பும், அளவில் பெரியதுமான தடித்த பகுதியையும் கொண்டவை. இவை கருப்பு சிவப்பு பானை ஓடுகளுக்கு இணையான அளவிற்கு கலந்து காணப்படும். பிற பானை ஓடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவை சற்று தரம் குறைவாகவே காணப்படும்.

1. நீண்ட கூர்மையான விளிம்புடைய கிண்ணம்.

2. வெளிவளைந்த தடித்த விளிம்புடைய பானை.

3. உருண்டையான தடித்த மணி போன்ற அமைப்பு கொண்ட விளிம்புடைய ஜாடி.

4. உருண்டையான வெளிவளைந்த விளிம்புடைய பானை.

5. தட்டையான வெளியே நீட்டிக் கொண்டுள்ள விளிம்புடைய பாத்திரம்.

6. வெளிவளைந்த தடித்த, மணி போன்ற உருண்டையான விளிம்புடைய பானை.

7. வெளிப்புறம் சாய்ந்த தடித்த விளிம்புடைய உருண்டையான பாத்திரம்.

8. சேமித்து வைக்கும் பானை, வெளிவளைந்த வளைவுகளுடன் கூடிய விளிம்புடையவை. வட்ட வடிவமான உருண்டையான பானை வகை.

9. தடித்த மணி போன்ற அமைப்புடைய விளிம்பு கொண்ட உருண்டையான பானை.

10. உள்வளைந்த விளிம்புடைய மூடி.

11. வெளி வளைந்த விளிம்புடைய மூடி.

12. வெளிவளைந்த மணி போன்ற அமைப்புடைய விளிம்பும் நீண்ட கழுத்தும் கொண்ட ஜாடி.

***சிவப்பு பானை ஓடுகள்: (பக்கம்* 19 I - 19J*)***

இந்த வகை பானை ஓடுகள் அதிக அளவில் காணப்படும் களிமண் கொண்டு தூய்மைப்படுத்தி பின்னர் பயன்படுத்துவர். தடித்த மற்றும் சிறிய வடிவிலான பாத்திரங்கள், கிண்ணங்கள், குடுவை போன்றவைகள் கிடைத்துள்ளன. வழுவழுப்பான வெளிப்புறத் தோற்றமும், சில சமயங்களில் உட்பகுதியிலும் வழுவழுப்பான பூச்சு காணப்படும். பெருங் கற்கால பண்பாட்டு வகையைச் சார்ந்த பானை ஓடுகளில் இதுவும் குறிப்பிடத்தக்க ஒன்று.

1. தடித்த உள்வளைந்த விளிம்புடைய பானை.

2. தடித்த விளிம்பும், நடுவே ஆழமான கோடுகளுடனும் காணப்படும் பானை, உருண்டையான அமைப்பு கொண்டவை.

3. நீண்ட கழுத்துடைய மழுங்கிய விளிம்புடன் கூடிய ஜாடி. ஆழமான கோடு தோல்பட்டையில் செல்கின்றது.

4. வட்டமான மணி போன்ற விளிம்புடைய பானை. நீண்ட கழுத்தும் உருண்டையான வடிவமும் கொண்டவை.

5. மழுங்கிய முனை உடைய விளிம்பு கொண்ட பானை.

6. தடித்த வெளிவளைந்த விளிம்புடைய பானை. விளிம்பில் ஆழமான கோடு வரையப்பட்டுள்ளது.

7. தடித்த வெளிவளைந்த விளிம்புடைய பானை, வட்டமான அமைப்புடைய அடிப்பகுதி.

8. மணி போன்ற உருண்டை விளிம்புடைய பானை வட்டமான அடிப்பகுதி அமைப்புடையவை.

9. தட்டையான மேல்பகுதி குவிந்த அமைப்புடையது.

***சொரசொரப்பான பானை ஓடுகள்: (பக்கம் 23A - 23C)***

சொரசொரப்பான பானை ஓடுகள் பெரும்பாலும் சாதாரணமான நிலையில் அதிக அளவில் காணப்படும். சிலவற்றில் அலங்காரங்கள் செய்யப்பட்டு பயன்படுத்தியுள்ளனர். பெரும்பாலும் அதிக பயன்பாட்டில் இப்பானை வகைகள் இருந்துள்ளன. பெரும்பாலான மக்கள் பயன்படுத்தியுள்ளனர். இவற்றில் காணப்படும் அலங்காரங்களில் குறிப்பாக கைவிரல்கள் கொண்டு நகத்தால் கிள்ளுவது போன்ற அமைப்பும், இரண்டு பக்கமும் சாய்வான கோடுகளிட்டு அமைத்தல், இலை வடிவமும், இறகு போன்ற அமைப்பிலும் அலங்கரிப்புகள் பானையின் உடல் பகுதியிலும் தோள்பட்டை பகுதியிலும் காணப்படும். இந்த வகையான பானைகள் பெரும்பாலும் அளவில் பெரியதாகவும், தடித்தும் காணப்படுவது இயல்பு. கால்கள் கொண்ட ஜாடி, வட்டமான அடிப்பகுதி கொண்ட பானை, சுடுமண் தாங்கி, கிண்ணம், தட்டு, சிறிய பாத்திரம், வட்டமான அடிப்பகுதி கொண்ட பானைகள், பெரிய அளவிலான சேமிக்கப் பயன்படுத்தும் பானை என பல்வேறு வடிவில் கிடைத்துள்ளது.

1. வட்டமான அடிப்பகுதி கொண்ட பானை, உருண்டையான மணி போன்ற விளிம்புடையவை.

2. வட்டமான அடிப்பகுதியுடன் காணப்படும் பானை, வெளிப்புறம் வளைந்த விளிம்புடையவை.

3. வெளிப்புறம் வளைந்த, வட்டமான மணி போன்ற அமைப்பில் விளிம்பினை கொண்ட பானை.

4. நீண்ட கழுத்துடைய வழவழப்பான விளிம்புடைய ஜாடி.

5. நகக் கூர்மையான விளிம்புடைய கிண்ணம்.

6. வெளிப்புறம் வளைந்த விளிம்புடைய பானை.

7. தடித்த மணி போன்ற அமைப்புடைய விளிம்பு கொண்ட பாத்திரம்.

8. வெளிப்புறம் வளைந்த தடித்த விளிம்புடைய பானை.

9. வட்டமான அடிப்பகுதி கொண்ட பானை, வெளி வளைந்து விரிந்த தட்டையான விளிம்புடையவை.

10. நீண்ட கழுத்துடைய தடித்த விளிம்புடைய பானை.

11. தடித்த கோடுகளுடன் கூடிய விளிம்புடைய பாத்திரம்.

12. நீண்ட, முனை மழுங்கிய, வெளிப்புறம் வளைந்த விளிம்புடைய பானை, வட்டமான அடிப்பகுதி கொண்டவை.

13. தடித்த, வெளிப்புறம் வளைந்த, முனை மழுங்கிய விளிம்புடைய பானை. குறுகிய கழுத்தும் ஆழமான கோடுகளும் கொண்ட வட்டமான அடித்தளம் கொண்டவை.

14. உட்புறம் வளைந்த, தடித்த, முனை மழுங்கிய ஜாடி.

15. வட்டமான தடித்த பெரிய பானை.

16. மணி போன்ற அமைப்புடைய விளிம்பும், சற்று வெளிப்புறம் வளைந்த பாத்திரம்.

17. நீண்ட கழுத்து, மணி போன்ற அமைப்புடைய விளிம்பினைக் கொண்ட ஜாடி, வட்ட வடிவமான அடிப்பகுதி கொண்டவை.

### *அலங்கரிக்கப்பட்ட பானை ஓடுகள்: (பக்கம் 23K)*

அலங்கரிக்கப்பட்ட சில பானை ஓடுகள் செம்பியன் கண்டியூர் அகழாய்வில் கண்டு எடுக்கப்பட்டன. இவை அக்கால மக்களின் கலை உணர்வையே வெளிப்படுத்துகின்றது. ஆழமான பள்ளம் கொண்ட கோடுகள், தோள்பட்டை பகுதியிலும், நகக்கீறல்கள் கொண்ட வடிவமும், கட்டை விரல் அழுத்தத்தால் ஏற்படுத்தும் அலங்காரம், இலை வடிவம், வளைவு வளைவான அலங்காரங்களுடன் கூடிய பானை ஓடுகள் கிடைத்துள்ளன. தடித்த சுடுமண் உருண்டையான வடிவில் உடல் பகுதியில் ஒட்டி அதன்மேல் கை விரல் பதிப்பும், கிள்ளி எடுப்பது போன்ற அமைப்பும் பார்ப்பதற்கு மிகவும் அழகுடையதாகத தோன்றுகின்றது. இது போன்ற அலங்காரங்கள் இரும்புக் கால பண்பாட்டின் வகையைச் சார்ந்தவை எனக் குறிக்கலாம்.

1. பானையின் உடல் பகுதியில் தடித்த உருட்டிய கயிறு போன்ற அமைப்பில் தயார் செய்து, அதனை மேல்பகுதியில் பொருத்தி கை விரல் மூலம் கிள்ளியும், பதித்தும் அழகு செய்துள்ளனர்.

2. விளிம்பின் கீழ்ப்பகுதியில் அதாவது பானையின் தோள்பட்டையில் இலைக் கொத்து போன்ற அமைப்பு வரிசையாகச் செல்வது போன்றும், அதன் கீழே வளைந்து வளைந்து செல்லுவதுமான கோடுகளும், இப்பானைக்கு அழகு சேர்க்கின்ற வகையில் அமைந்துள்ளன.

3. இரண்டு வளைந்து வளைந்து செல்லும் கோடுகள் பானையின் தோள்பட்டையின் முழுவதும் செல்வது போன்ற அமைப்புடைய அலங்காரம் கொண்ட பானை.

# சொரசொரப்பான பானை ஓடுகள்

## COARSE RED WARE




7
8
9
10
11
12


13
14
15
16
17

# குறியீடுகள் கீறப்பட்ட பானை ஓடுகள்

## GRAFFITI



BxR ௧



R.S ௨



BxR ௩



C.R.W ④



R.S ⑤



BXR ⑥



ALL BLACK ⑦



ALL BLACK ⑧



BAR ⑨





B×R ⑩



ALL BLACK ⑪



B×R ⑫



B×R ⑬



BKR (14)



ALL BLACK (15)



ALL BLACK

(16)



ALL BLACK
17





B×R (19)



R.S. (20)



## அலங்கரிக்கப்பட்ட பானை ஓடுகள்



## *குறியீடுகள் (பக்கம் 23D - 23J)*

செம்பியன் கண்டியூர் அகழாய்வு மூலம் பல குறியீட்டுக் கீறல்களுடன் கூடிய பானை ஓடுகள் சேகரிக்கப்பட்டன. அவற்றின் ஆய்வு பெருங்கற்கால பண்பாட்டுக் காலத்தைச் சார்ந்த மக்களின் வாழ்க்கை முறை, அவர்களின் தரம், சமுதாய முன்னேற்றம், தொழில் ஆகியவை இதன் மூலம் வெளிக்கொணரப்படுகின்றது.

இவ்வகழாய்வில் 29 குறியீடுகள் கீறப்பட்ட பானை ஓடுகள் சேகரிக்கப்பட்டன. தென்னிந்தியாவிலும், தமிழகத்திலும் நடைபெற்ற அகழாய்வுகளில் கிடைத்துள்ள கீறல் குறியீடுகள் அனைத்தும் பானைகள் சுடப்பட்ட பின்னர் கீறப்பட்டவையே. ஒருசில குறியீடுகள் மட்டும் சுடுவதற்கு முன்னர் இடப்பட்டு பயன்படுத்தியுள்ளனர். பெருங்கற்கால பண்பாட்டுக் காலத்தைச் சார்ந்த அகழாய்வுகளில் கீறல் குறியீட்டுப் பானைகள் மிகவும் இன்றியமையாதனவாகவும், குறிப்பிட்ட இடத்தையும் பெற்றுள்ளது. இந்த கீறல்கள் பெரும்பாலும் பானையின் தோள்பட்டையில்தான் காணப்படுகின்றன. சில பானைகளில் அடிப்பக்கத்திலும், விளிம்பின் ஓரத்திலும் காணப்படுகின்றன.

இந்த கீறல் குறியீடுகள் கருப்பு சிவப்பு, சொரசொரப்பான சிவப்பு, பளபளப்பான சிவப்பு நிற பானை ஓடுகள் என அனைத்து வகையான பானைகளிலும் கிடைத்துள்ளன. இவற்றில் கருப்பு சிவப்பு மற்றும் வழுவழுப்பான சிவப்புநிற பானை ஓடுகளில் மட்டும் அதிக அளவிலும், மற்ற பானை ஓடுகளில் குறைந்த அளவிலும் கிடைத்து வருகின்றன. இந்தப் பண்பாட்டுக் கூறானது தமிழகத்தில் பெருங்கற்கால பண்பாட்டைச் சார்ந்த அகழ்விடங்கள் அனைத்திலும் பின்பற்றப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

இந்த குறியீடுகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று தனித்து காணப்படும், கீறல் குறியீடு, அடுத்து இரண்டு மற்றும் அதற்கு மேற்பட்ட குறியீடுகள் கொண்டவை. செம்பியன் கண்டியூரில் இரண்டு வகையான குறியீடுகளும் கிடைத்துள்ளன என்பது சிறப்பானது ஆகும்.

தனிக் குறியீடுகளாக முக்கோண வடிவ மூன்று கோடுகள் அடிப்பகுதி இன்றியும், இரண்டு முக்கோணக் கோடுகள் ஒன்றை ஒன்று ஒட்டியவை போலவும், உடுக்கை, முக்கோண வடிவம் மற்றும் அதன் நடுவே குறுக்குக் கோடுகளும், நின்ற மனிதன் மற்றும் வளைந்து நின்ற மனித உருவம் கொண்ட குறியீடுகள் என பல்வேறு நிலையில் கிடைத்துள்ளன. செம்பியன் கண்டியூரில் அதிக அளவில் ஸ்வஸ்திகா குறியீடு பொறித்தவை, செடி போன்ற அமைப்புடையவைகளும் கிடைத்துள்ளன.

இரண்டு குறியீடுகளாக முக்கோண வடிவத்தில் அடிக்கோடின்றியும், அருகே முக்கோணமும் நடுவே கோடுகளும் உடைய குறியீடு ஒன்றும், இரண்டு முக்கோண கோடுகள் இணைவது போன்ற குறியீடுகளை நோக்கும்போது இவற்றையும் இரண்டு குறியீடுகளாகக் கருதலாம். இவை அனைத்தும் கூர்மையான ஆயுதங்களைப் பயன்படுத்தி கீறியிருத்தல் வேண்டும்.

## புதைக் குழியிலும் வாழ்விடத்திலும் காணப்படும் குறியீடுகள் :

இந்த இரண்டு பகுதிகளிலும் கிடைத்த இரும்புக் காலத்தைச் சேர்ந்த குறியீடுகளைத் தொல்லியல் ஆய்வாளர்கள் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது. திரு. பிரன்பில், பூட், ஹண்ட் மற்றும் யஸ்தானி, பி.கே.தாப்பர், பேனர்ஜி, பி.பி.லால், குருமூர்த்தி போன்ற பல ஆய்வாளர்கள் இந்த குறியீடுகளை ஆய்வு செய்து பல கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். இவை எழுத்துக்களின் பரிணாம வளர்ச்சிக்கு முன்னோடி என்றும், ஒலி ஓசையின் வடிவமாகவும் இவை இருக்கக் கூடும் என்ற கருத்தினைத் தெரிவித்துள்ளனர்.

இந்த குறியீடுகள் பொறித்த பானை ஒடுகளை ஆய்வு செய்ததன் அடிப்படையில் இவை காலத்தால் கி.மு. 500 முதல் கி.பி.300 வரையிலான காலகட்டத்தைச் சார்ந்தவை எனக் கருதப்படுகிறது. தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின் இரும்பு காலத்தை, மண் அடுக்குகள் மூலமும் அவற்றில் கிடைத்த தொல்பொருட்களின் அடிப்படையில் இவை கி.மு. 500 முதல் கி.பி. 300 வரையிலான காலகட்டத்தினைச் சேர்ந்தவை என ஆய்வாளர்கள் நிர்ணயம் செய்துள்ளனர். அதனடிப்படையில் செம்பியன் கண்டியூரில் கிடைத்துள்ள குறியீடுகள் ஒன்றாக இருப்பதால் இப்பகுதியில் கிடைத்துள்ள கீறல் குறியீடுகளும் அதே காலகட்டத்தைச் சார்ந்தவை என்பதை உறுதி செய்கின்றன.

# 7. முடிவுரை

செம்பியன் கண்டியூரில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில், நான்கு ஆய்வுக் குழிகள் வெவ்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாய்வில் பெரும்பாலும் பானை ஓடுகளே தொல் பொருட்களாகக் கிடைத்துள்ளன. குறிப்பாக முதுமக்கள் தாழிகள், சேமிப்புப் பானைகள், கறுப்பு சிவப்பு பானைகள், கறுப்புப் பானைகள், சொரசொரப்பான சிவப்பு நிறப் பானைகளின் ஓடுகளும் கிடைத்துள்ளன. இவற்றில் 29 பானைக் குறியீட்டுக் கீறல்களுடன் கூடிய பானை ஓடுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவை இரும்புக்காலத்தை அதாவது, கி.மு. 500 முதல் கி.பி. 300 வரையிலான காலகட்டத்தைச் சேர்ந்தவைகளாகும். இவ்வூரில் அகழாய்வில் ஒரே ஒரு காலகட்டத்தைச் சேர்ந்த தொல்பொருட்களே கிடைத்துள்ளன.

இவ்வகழாய்வில் கிடைத்த தொல்பொருட்களின் அடிப்படையில் இப்பகுதி மக்கள் விவசாயத்தையே முதன்மை தொழிலாகக் கொண்டிருந்தனர் என அறியலாம். மேலும் இரும்புக் காலத்தைச் சேர்ந்த வாழ்விடத் தடயங்களான தொல்பொருட்கள் ஏதும் கிடைக்காத நிலையில், பெரும்பாலும் தமிழகத்தில் அதிக அளவில், பெருங்கற்கால ஈமச் சின்னங்களில் காணப்படும் பானைகளும், தொல்பொருட்களுமே செம்பியன் கண்டியூர் அகழாய்வில் கிடைத்துள்ளதால்; இப்பகுதி அக்காலத்தில் இறந்தவர்களைப் புதைத்த இடமாக இருக்கக் கூடும். இங்குக் கிடைத்துள்ள உடைந்த நிலையிலான புதிய கற்கால கைக்கோடாரி தங்கள் மூதாதையர்களின் நினைவினைப் போற்றும் வகையில் ஒரு வழிபாட்டுச் சின்னமாக இருக்கலாம் தாழிகளில் வைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இங்குக் கிடைத்துள்ள பானை ஓட்டுக் குறியீடுகளையும், பிற இரும்பு காலப் பண்பாட்டு இடங்களான, கொடுமணல், மாங்குளம், ஆதிச்சநல்லூர் போன்ற இடங்களில் கிடைத்த பானை ஓட்டுக் குறியீடுகளுடன் ஒப்பிட்டு ஆய்வு மேற்கொண்டதில், சிந்துவெளி குறியீடுகள், பானை ஓட்டுக் குறியீடுகள் ஆகியவற்றிற்கான தொடர்பினை அறிய முடிகின்றது. மேலும் காவிரியின் வடகரை, தென்கரையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் காவிரியின் இரு கரைகளில் உள்ள ஊர்களின் தொன்மையையும், வரலாற்றையும் அறிய முடிகின்றது.

பிற்சேர்க்கை I

# காவிரி வடகரையில் செம்பியன் கண்டியூரைச் சுற்றியுள்ள ஊர்களின் தொன்மை வரலாறு

**கோ.முத்துசாமி,**
காப்பாட்சியர், தரங்கம்பாடி,
**கோ.அர்ச்சுணன்,**
காப்பாட்சியர், தஞ்சாவூர்.

காவிரிக்கரையில் செம்பியன் கண்டியூரைச் சுற்றிலும் உள்ள ஊர்களும் ஆய்வு செய்யப்பட்டன. அதன் வரலாற்று தடயங்களும் இங்கு தரப்பட்டுள்ளன.

### *1. சேகண்டிருப்பு:*

இதுவும் செம்பியன் கண்டியூர் போல வில்லியநல்லூரின் உட்கிராமமாக உள்ளது. இதுவும் வில்லியநல்லூருக்கு உட்பட்ட ஒரு சிற்றூராகும். விக்கிரமன் ஆற்றின் பிரிவான காளி வாய்க்கால் பாசனம் இங்கு உள்ளது. சுமார் 100 குடும்பங்கள் இப்பகுதியில் உள்ளன. (1) அய்யனார் கோயில், (2) அருள்மிகு முத்து மாரியம்மன் கோயில்கள் ஆகியவை உள்ளன.

இங்கு கற்பகவிநாயகர் கோயில் (17-ஆம் நூற்றாண்டு) மன்மதஈஸ்வரர் கோயில் (18-ஆம் நூற்றாண்டு) அருள்மிகு முத்துமாரியம்மன்கோயில் (தற்காலம்) ஆகியன ஆய்வு செய்யப்பட்டன. கி.பி.15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விநாயகர் சிற்பம் ஒன்று உதிரியாக உள்ளது.

இதைத் தொடர்ந்து காவிரியின் பிரிவான மயிலன் வாய்க்கால் பாயும் ஆற்காடு எனும் சிற்றூரும் ஆய்வு செய்யப்பட்டது. கி.பி.17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஐயனார் பூரணி புஷ்கலையுடன் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. இக்கோயில் பாளையப்பட்டு (நீலகங்கரையர்) இன மக்களின் குலதெய்வமாக வழிபாட்டில் உள்ளது. மேலும், பெருமாள் கோயில் திடலில் கோயில் இருந்து அழிந்துள்ளதும் தெரிகிறது. திருமால், ஸ்ரீதேவி, பூதேவி ஆகிய சிற்பங்கள் காணாமல் போய்விட்டன. மேற்கண்ட விபரங்கள் திரு.கே.கண்ணையன்

மற்றும் திரு.பூமிநாதன் ஆகியோர் மூலம் அறியப்பட்டது. இப்பகுதியிலும் சில தொன்மையான மட்கலங்களின் ஓடுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டோ, கற்கருவிகளோ இங்கு கிடைக்கவில்லை. செம்பியன்+ கண்டியர்+இருப்பு என்பது சுருங்கி சேகண்டிருப்பு என்றாகி தற்போது சேண்டிருப்பு என வழங்கப்படுகிறது.

## *2. வில்லியநல்லூர்:*

இதுதான் வருவாய் பஞ்சாயத்து கிராமம். செம்பியன் கண்டியூருக்கு மேற்கே இவ்வூர் அமைந்துள்ளது. இங்கு 2 அம்மன் கோயில்கள், ஒரு சிவன் கோயில், ஒரு வீரன் கோயில், ஒரு விநாயகர் கோயில், கன்னியர் எழுவர்கோயில் போன்றன உள்ளன. இவ்வூர் கோயில் களில் உள்ள சிற்பங்கள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு ஆகும். மேலும், கல்வெட்டுகளோ, தனிச் சிற்பங்களோ காணப்படவில்லை. ஆய்வில், இவ்வூரில் சுமார் 500 குடும்பங்கள் உள்ளன என்பதும் தெரிகிறது.

செம்பியன் கண்டியூரின் மேற்கே விக்கிரமன் ஆற்றின் வடகரையில் உள்ள இவ் வில்லியநல்லூர் என்ற ஊரில் ஸ்ரீகாளீஸ்வரர் கோயில் என்ற பழமையான கோயில் உள்ளது. இக்கோயிலில் அரிய சதுர்முக சண்டிகேஸ்வரர் சிற்பம் உள்ளது.

இது மற்ற சிற்பங்களில் இருந்து மாறுபட்டு காணப்படுகின்றது. நான்கு முகங்களும், நான்கு கரங்களுடன் அமர்ந்த நிலையில் உள்ளது. கைகளில் சூலம், மழு, அக்கமாலை, கெண்டி ஆகியன உள்ளன. இச்சிற்பம் கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதன் அருகில் செப்புக் காசுகள் கிடைத்தன என்றும் இவை வட்டாட்சியர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது என்றும் முன்னாள் கி.நி. அலுவலர் திரு.ராஜாமணி தெரிவித்தார். இங்குள்ள கோயிலின் முன்புறம் சூலக்கல் ஒன்றும் அதில் "திருவெண்காடு" என்ற கல்வெட்டு ஒன்றும் கி.பி.13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக தெரிகின்றது. மேலும் ஓமக்குளம் என்ற தீர்த்தமும் நீலமேகப்பெருமாள் கோயில், பிடாரி திடல் ஆகியனவும் ஆய்வு செய்யப்பட்டன. இத்திடலில் இடைக் காலத்தைச் சார்ந்த மட்கலங்களின் ஓடுகளும் செங்கற்களும் காணப்படுகின்றன.

## *3. முருகவேல் மங்கலம் : (முருகமங்கலம்)*

மயிலாடுதுறை வட்டத்தில் கண்டியூருக்கு வடக்கில் எண்.33 முருகவேல் மங்கலம் உள்ளது. இது காளி வாய்க்காலின் மேற்கரையில் அமைந்துள்ளது. இங்கு 12 தெருக்கள் உள்ளன. சுமார் 700 குடும்பங்கள் வசிக்கின்றனர். இவ்வூரில் (1) பிடாரி கோயில் (2) அய்யனார் கோயில் (3) மாரியம்மன் (4) விநாயகர் (5) அருள்மிகு கைலாசநாதர் கோயில்கள் முதலியவை உள்ளன. சிவன் கோயிலில் இரண்டு பிற்காலச் சோழரின் கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. சுமார் 40 ஆண்டுகட்கு முன்பு மேலத் தெருவில் வசிக்கும் திரு.சி.பெருமாள் படையாட்சி, வயது 75 அவர்களது வீட்டுத் தோட்டத்தில் இரண்டு

முதுமக்கட்தாழிகள், சுடுமட் கிண்ணங்கள் ஆகியன குப்பைக்குழி தோண்டிய போது கிடைத்துள்ளன. அவை உடைந்து விட்டதால் தற்போது சேகரிப்பில் இல்லை. வேறு தொல்பொருள் எதுவும் இங்கு கிடைக்கவில்லை. கல்வெட்டில் முருகவேல் மங்கலம் என்று ஊர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது அது மருவி முருகமங்கலம் என வழங்கப்படுகிறது.

காவிரியின் கிளையான மயிலன் வாய்க்கால் இவ்வூரில் பாய்ந்து செழிப்பூட்டுகிறது. இடிந்த சிவன் கோயில் பகுதி செங்கமேடு எனும் பெயரில் ஊரின் வடக்கே 1 கி.மீ. தூரத்தில் உள்ளது. அங்கும் தெற்கே கன்னித்தோப்பு என்ற இடத்திலும் சோழர் கால சிவலிங்கம் ஒன்றும் தனித்தனியே வெட்ட வெளியில் பெரிய சிவலிங்கமாக உள்ளன.

### 4. திருமணஞ்சேரி:

இவ்வூர் முருகமங்கலத்திற்கு கிழக்கிலும், கண்டியூருக்கு வடக்கிலும் 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. விக்கிரமன் ஆற்றின் கீழ்க்கரையில் உள்ளது. திருஎதிர்கொள்பாடி (கொள்ளாப்படி) எனும் உட்கிராமம் உள்ளது. இரண்டு ஊர்களிலும் தேவாரம் பாடல் பெற்ற சிவன் கோயில்கள் வழிபாட்டில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வசம் உள்ளன. அவை; 1)ஐராவதேஸ்வரர் திருக்கோயில்; 2) கல்யாண சுந்தரேஸ்வரர் திருக்கோயில்.

விக்கிரமன் ஆற்றின் பிரிவான காளி வாய்க்காலும் இங்கு பாய்வதால் செழிப்பாக ஊர் உள்ளது. கல்யாணசுந்தரேசுவார் சிவன்கோயில் செம்பியன் மாதேவியார் காலத்தில் கட்டப்பட்டது. இக்கோயிலைச் சுற்றி 4 பக்கமும் 100 அடி அகலத்தில் அகழியும் உள்ளது.

சோழர் கால சிற்பங்களும் கல்வெட்டுகளும் அமைந்து உள்ளன. கிராம காவலர் திரு. நாராயணசாமி வயது 65 அவர்களிடம் விபரம் கேட்கப்பட்டது. கற்கருவிகளோ, முதுமக்கட் தாழியோ இங்கு இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்று விபரம் கூறினார். மாணஞ்சேரி - என்றால் பெருஞ்சேரி என்று பொருள். அதாவது மக்கள் கூட்டம் உள்ள பேரூர் ஆகும். திரு என்ற அடைமொழி சேர்ந்து மருவி திருமணஞ்சேரி என தற்போது அழைக்கப்படுகிறது. இங்குதான் திருமணம் ஆகாத பெண்கள் வேண்டிக்கொண்டு செல்வது வழக்கமாகும்.

### 5. திருமங்கலம்:

திருமணஞ்சேரிக்கு 1 கி.மீ வடக்கில் காளி வாய்க்கால் விக்கிரமன் ஆறு இவைகட்கு நடுவில் உள்ள செழிப்பான ஊர் இது. சுமார் 1000 குடும்பங்கள் அமைந்து உள்ள பேரூர். (1) விநாயகர் கோயில்; (2) மாரியம்மன் கோயில்; (3) அருள்மிகு பூலோக நாதசுவாமி கோயில்கள் இவ்வூரில் உள்ளன. இதில் பிற்கால சோழர் கல்வெட்டுக்கள் 40 தொல்லியல் துறையால் படியெடுக்கப்பட்டுள்ளன. சிவன்கோயில் இடிந்து பழுதுற்றபடி உள்ளது. தொல்லியல் துறை மூலம் வரலாற்று சின்னமாக பாதுகாக்கும்படி நாட்டாண்மைகள் கூறினர். இவ்வூரில் சில உதிரிச் சிற்பங்கள் சேகரிக்கலாம். வேறு முக்கிய தடயங்கள் ஏதும் இல்லை என்று கிராம காவலர் திரு.பாலகிருஷ்ணன், வயது 60 தகவல் கூறினார்.

### 6. திருவேள்விக்குடி:

இது ரெட்டிக்கடலங்குடி எனும் ஊரின் சிற்றூர் ஆகும். இது கண்டியூருக்கு தென் கிழக்கில் விக்ரமன் ஆற்றின் கீழ்க்கரையில் அமைந்துள்ளது. (1) விநாயகர் கோயில் (2)

முனியீஸ்வரன் கோயில் (3) ஸ்ரீமணவாள ஈஸ்வரர் கோயில்கள் உள்ளன.

சிவன் கோயில் செம்பியன் மாதேவி காலத் திருப்பணி ஆகும். இங்கு சுமார் 80 கல்வெட்டுகள் தொல்லியல் துறை படியெடுத்து சமீபத்தில் தமிழ்நாட்டு கல்வெட்டுத் தொகுதியில் அவை வெளியாகி உள்ளது. தற்போது ஆய்வில் கோயில் வடக்குத் திருச்சுற்றில் சருகு மற்றும் புல்வெளி மூடிய இடத்தில் ஒரு துர்க்கை சிற்பம் கண்டறியப்பட்டுள்ளது. நின்ற நிலை 4 கரங்கள் சங்கு சக்கரம் ஏந்தி நின்ற நிலை. இது பல்லவர் கலையில் அமைந்துள்ளது. கி.பி. 8-ஆம் நூற்றாண்டு என மதிப்பிடப்படுகிறது. இவ்வூரில் வேறு தொல்லியல் தடயங்கள் கிடைக்கவில்லை.

இவ்வூர் கல்வெட்டில்தான், “செம்பியன் கண்டியூர்” என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. கோயிலின் வெளிச்சுவரில் செம்பியன் மாதேவியாரும், கண்டராதித்த சோழரும் வேள்வி செய்து இறைவனை வழிபடும் காட்சி புடைப்புச் சிற்பமாகக் காட்சி தருகிறது.

### *7. கடலங்குடி:*

கடலங்குடி என்ற இந்த ஊரில் சிவன்கோயில் மேடு, மந்தைவெளி என்ற மேடு, காவிரிக்கரை மண்டபம் ஆகிய பகுதிகள் உள்ளன. காவிரியின் தென்புறம் பெருங்கற்கால தாழிகள் இருந்தன என்பது இந்த ஊரைச் சார்ந்த திரு.செல்லையா என்பவர் தெரிவித்தார். இவற்றுடன் இங்கு உறை கிணற்றின் பகுதிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. உறை கிணற்றின் பகுதி ஒன்று இன்றும் அவருடைய வீட்டில் உள்ளது. முதுமக்கள் தாழியின் ஓடுகள் மேற்பரப்பில் காணப்படுகின்றன.

சிவன்கோயில் மேட்டில் இடைக்காலத்தைச் சார்ந்த சொரசொரப்பான பானை ஓடுகள் கிடைக்கின்றன. மேலும் இங்கு பழைய கோயில் ஒன்று இருந்ததற்கான தடையங்கள் உள்ளன. மந்தைவெளி என்ற பகுதியில் பெரிய லிங்கம் என்றும் உள்ளது. காவிரியின் தென்கரையில் உடைந்த நிலையில் பல சிற்பங்கள் இருந்தன என்றும் தெரிவித்தனர். ஆனால் தற்சமயம் கடலங்குடியின் வடக்கு பகுதியில் தவ்வை (மூத்ததேவி) சிற்பம் ஒன்று மட்டும் வழிபாட்டில் இருந்து வருகின்றது. இது வாய்க்கால் மண்ணில் புதைந்து இருந்து அது எடுக்கப்பட்டது என்று கூறுகின்றனர். அமர்ந்த நிலையில் உள்ள தவ்வையின் தலையில் கரண்ட மகுடமும், மார்பு கச்சை இன்றியும், மாந்தன் மாந்தியுடனும் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் உருவ அமைதியைக் கொண்டு இது கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பது தெரிகின்றது.

இவ்வூர் கண்டியூருக்கு கிழக்கில் 2 கி.மீ.யில் காவிரியின் வடகரையில் அமைந்துள்ளது. தெலுங்கு பேசும் ரெட்டியார் இனத்தவர் 4 தெருக்களில் வசிக்கின்றனர். 6 தெருக்களில் வன்னியர் உள்ளிட்ட மற்ற இனத்தவர் வசிக்கின்றனர். இங்கு ஊருக்கு வடக்கே வாய்கால் கரையில் ஆய்வு செய்த போது மூத்த தேவி எனும் (ஜேஷ்டா தேவியின்)

அரிய சிற்பம் ஒன்று கண்டறியப்பட்டது. மாந்தன், மாந்தியுடன் ஒரே கல்லில் கலைநயத்துடன் வடிக்கப்பட்டுள்ளது. இது கி.பி. 9-ஆம் நூற்றாண்டு ஆகும். ஊரார் இதனை மேடையில் வைத்து பிரதிஸ்டை செய்து சிறு சன்னதி அமைத்து வழிபாடு செய்து வருகின்றனர்.

மேலும் இவ்வூர் தெற்கே மணல்வெளி தெருவில் குடியிருப்பு மனைப் பகுதியில் 2 ருத்திரபாகம் மட்டும் தனித்தனியாகவும் மற்றும் ஒரு பெரிய சிவலிங்கம், ஆகியவை நல்ல நேர்த்தியான வேலைப்பாடுடன் உள்ளன. தற்போது இவை வழிபாட்டில் இல்லை. இவை கி.பி. 10-ஆம் நூற்றாண்டு சோழர் காலம். இவையன்றி வேறு தடயங்கள் இல்லை என காவலர் திரு.ஜெயராஜ், வயது 48 கூறினார்.

### *கடலங்குடி: செங்கமேட்டுத் திடல்:*

சோழ மன்னர்கள் காலத்தில் இத்திடலில் சிவன்கோயில் இருந்து திருவிழாக்கள் நடத்துள்ளன. இக்கோயிலுக்குரிய நந்தி வானாதிராஜபுரத்தில் கோயில் முன் மேடையில் உள்ளது. இங்கிருந்த பல சிற்பங்கள் இடம் பெயர்ந்துவிட்டன. பழைய சிவன் கோயில் இருந்து அழிந்து விட்டது. பெரிய லிங்கம் சந்திரக்காந்தக் கல்லால் ஆனது. நேர்த்தியானது. ஊரார் தற்போது கீற்றுக்கொட்டகைக் கட்டி மீண்டும் வழிபாடு செய்து வருகின்றனர்.

### *8. சேத்திரபாலபுரம்:*

இவ்வூரில் கம்பர் கொல்லை என்ற மண்மேடு ஆய்வு செய்யப்பட்டதில் இந்த மண்மேட்டிலும் இடைக்கால பானை ஓடுகள் மட்டும் கிடைத்தன. இங்குள்ள சாலையின் அருகில் தலையின்றி உள்ள சந்திரனின் சிற்பம் ஒன்று வழிபாடின்றி உள்ளது. நின்ற நிலையில் இரண்டு கரங்களுடன் காணப்படுகின்றது. இங்குள்ள சேத்திரப்பாலர்கோயில் பகுதியும் ஆய்வு செய்யப்பட்டது.

இவ்வூர் கண்டியூருக்கு தெற்கில் 2 கி.மீ.யில் காவிரியின் தென்கரையில் அமைந்துள்ளது. இங்கு கி.பி.12-ஆம் நூற்றாண்டு சிவன் கோயில் உள்ளது. சேத்திரபாலருக்கு (பைரவர்) தனிக்கோயில் உள்ளது. கல்வெட்டுகள் ஏதும் இல்லை. ஆய்வின்போது (1) தலை உடைந்த சூரியன் சிற்பம் கி.பி. 12-நூற்றாண்டு வாய்க்கால் கரையிலும், (2) இடதுபுறம் பூதேவியுடன் திருமாலின் அமர்ந்த நிலை சிற்பம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு திருக்குளத்தின் படித்துறையிலும் கண்டறியப்பட்டன. "கம்பர் தோப்பு" என்ற இடம் இவ்வூரில் உள்ளதால் சிறுவயதில் இங்கு கம்பர் வாழ்ந்ததாகக் கூறுகின்றனர். மேலும் 3 கோயில்கள் உள்ளன. கல்வெட்டுகள் ஏதும் இல்லை.

இங்கிருந்து தெற்காக 3 கி.மீ. சென்றால் கம்பர் பிறந்த ஊரான திருவழுந்தூர் (தேரழந்தூர்) எனும் பேரூரும், அங்கு காளி கோயில், சிவன் கோயில், இரண்டு பெருமாள் கோயில்களும் உள்ளன. தற்போது கம்பர்க் கோட்டமும் இங்கு நிறுவி அரசு பராமரித்து வருகிறது. இவ்வூரிலும் நடுவண் அரசு தொல்லியல் துறை அகழாய்வு செய்துள்ளது.

## 9. அரையபுரம்:

காவிரி ஆற்றின் தென்கரையில் உள்ள மேட்டில் சப்தமாதர்களின் சிற்பங்களான வராகி, மகேஸ்வரி இரண்டும் உடைந்த நிலையில் உள்ளன. தலையின்றி உள்ள விநாயகர் சிற்பம் ஒன்றும் உள்ளது.

இவை 12-13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. குளத்தில் அம்மன் சிற்பம் உள்ளது. குளக்கரையில் முதுமக்கள் தாழிகள் கிடைத்ததாகக் கூறுகின்றனர். தாழியின் ஓடுகள் தற்போது காணப்படவில்லை. ஆனால் கடலங்குடியிலிருந்து தொடர்ந்து தாழியின் ஓடுகள் கிடைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இங்கு பெருங்கற்காலம் முதல் வரலாற்றுக் காலம் வரை தொடர்ந்து வாழ்விடமாக இருந்துள்ளது. இவ்வூரில் அபிமுக்தீஸ்வரர் கோயில் உள்ளது. அதில் கல்வெட்டு இல்லை. வெண்கொற்ற குடையுடன் கூடிய பிச்சாடனார் சிற்பம் குறிப்பிடத்தக்கது. திரிபங்க நிலையில் நான்கு கரங்களுடன் உள்ள இச்சிற்பம் கி.பி.9-10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இக்கோயில் முற்றிலும் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

காவிரியின் தென்கரையில் உள்ள அரையபுரத்தில் காமாட்சியம்மன் ஆலயத்தின் அருகில் தாழிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டில் சிறப்பான கோயில் ஒன்று இருந்து அழிந்துள்ளது.

இதைத் தொடர்ந்து பிற்கால சோழர்களின் கலைப்பாணியில் உருவான உதிரி சிற்பங்கள், உறை கிணற்றின் பகுதிகள் கண்டெடுக்கப்பட்டு உள்ளன. எனவே சங்ககாலம் முதல் வரலாற்றுக் காலம் வரை தொடர்ந்து இப்பகுதி மக்களின் வாழ்விடமாக உள்ளது. வன்னியர் இனத்தில் ஒரு பிரிவான அரையர் என்பவர்கள் இங்கு வாழ்ந்து வருவதால் அரையபுரம் என்று வழங்கப்படுகிறது. இது சேத்திரபாலபுரம் என்ற ஊரின் உட்கிராமமாக விளங்குகிறது.

## 10. சோழன்பேட்டை:

சோழன்பேட்டையில் அபிராமி திடல், ஸ்ரீதான்தோன்றிஸ்வரர் கோயில் திடல் ஆகிய மண்மேடுகள் பார்வையிடப்பட்டன. இந்த மண்மேட்டில் தொல்பொருட்கள் கிடைக்கவில்லை. அருள்மிகு வானமுட்டிபெருமாள்கோயில் திடல் மற்றும் இப்பகுதியில் உள்ள குளக்கரை பகுதியும் ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஊர் பெரியவர் திரு.இராமன் என்பவரை சந்தித்தபோது இப்பகுதியில் முதுமக்கட் தாழி இருந்தது என்றும் தற்போது இவை விவசாயத்தின் பொருட்டு அழிந்துவிட்டன என்றும் கூறினார். தற்போது மேற்பரப்பில் எதுவும் கிடைக்கவில்லை. சோழர்கால ஐயனார் சிற்பம் ஒன்று வானமுட்டி பெருமாள் கோயிலுக்கு செல்லும் வழியில் உள்ளது. ஊரின் நடுவில் உள்ள பிள்ளையார் கோயிலில் பல்லவர் காலக் கலையில் அமைந்த சேயோன் (ஸ்ரீகுமரன்) தனிச் சிற்பம் உள்ளது.

மேற்கண்டவைகளைக் கொண்டு இப்பகுதியிலும் பெருங்கற்காலம் முதல் மக்கள் வாழ்ந்ததற்கான தடையங்கள் காணப்படுகின்றன. சோழர் காலத்தில் இப்பகுதியில் வாழ்விடங்கள் இருந்தன என்பதும் தெளிவாகின்றது.

சோழம்பேட்டையின் கிழக்கே அருள்மிகு அழகிய நாதேஸ்வரர் திருக்கோயிலும் அதன் கிழக்கில் 1½ ஏக்கர் பரப்பில் திருக்குளம் ஒன்று தண்ணீர் இன்றி உள்ளது. 15 ஆண்டுகளுக்கு முன்பு இத்திருக்குளத்தில் தூர் வாரும்போது 5 அடி உயரத்தில் கருப்பு நிறத்தில் வழுவழுப்பாக இரண்டு முதுமக்கட்தாழிகள் உடையாமல் எடுத்து தனது வீட்டுத் தோட்டத்தில் வைத்து இருந்ததாகவும், அவை பின்பு தானாக உடைந்து விட்டன என்கிறார் திரு.இராஜாராமன், வயது 65, விவசாயி, இவர் குளக்கரையில் குடியிருந்து வருகிறார்.

சிவலிங்கம் ஆவுடையார் பகுதி மட்டும் திருக்குளக்கரையில் உள்ளது. சிவன்கோயில் முழுவதும் செங்கல் திருப்பணி, 2 கல்வெட்டுகள் வாயில் நிலைக்காலில் இருந்து நம் துறை முனைப்புத் திட்டத்தில் படியெடுத்துள்ளது.

ஸ்ரீஅழகிய நாதர் திருக்கோயிலில் தாமரை பீடத்துடன் 6 அடி உயரத்தில் ஒரே கல்லில் சூரியனார் சிற்பமும் இதற்கு முன்பாக தனி சன்னிதியில் தெற்கு பார்த்தபடி 3 அடி உயரத்தில் பைரவர் சிற்பமும் உள்ளன.

இவை சோழர் கலை. செங்கல்லால் தூண்களும், அதில் கொடிக்கருக்குகளும், மூலவர் கருவறைமுன்பாக இடதுபுறம் 15 அடி நீளம் 5 அடி அகலம் 4 அடி உயரம் உடைய நிலவறை ஒன்றும் உள்ளன. இதுவும் சோழர் பெருவழியில் அமைந்த தொன்மையான ஊராகும்.

காவிரியின் வடகரையில் கண்டியூருக்கு கிழக்கில் உள்ள இவ்வூரில் அருள்மிகு "வானமுட்டி பெருமாள்" என்ற கோயிலில் மூலவர் சுமார் 12 அடி உயரத்தில் அத்தி மரத்தால் செய்து பிரமாண்டமாய்க் காட்சியளிக்கிறார். இது 800 ஆண்டுகட்கு முற்பட்டது. மேலும் வடக்கில் கோழிகுத்தி எனும் உட்கிராமத்தில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு உள்ள ஸ்ரீதான்தோன்றீஸ்வரர் கோயில் உள்ளது. இரண்டு கோயில்களிலும் கல்வெட்டு படியெடுக்கப்பட்டுள்ளன. இங்கு சோழர் மாளிகை - இருந்து அழிந்துள்ளது. இங்கு வழிபாடும் சோழர்கள் நடத்தியுள்ளதாகக் கோயில் குருக்கள் கூறினார். வேறு தடயங்கள் கிடைக்கவில்லை. இங்கு உள்ள சிவன் கோயில் பழைமையானது. கல்வெட்டும் சிற்பங்களும் கோயிலுக்கு கிழக்கில் பெரிய திருக்குளமும் உள்ளன. இக்கோயில் மூலவர் கருவறை சோழப் பேரரசி செம்பியன் மாதேவியார் காலத்தில் கட்டப்பட்டதாக உணர முடிகிறது.

மயிலாடுதுறை வட்டம், காவிரியின் கரையில் அமைந்த செழிப்பான ஊர் வடபாதி சோழம்பேட்டை. முதலாம் பராந்தகனின் கோயில் மற்றும் சோழ இளவரசனின்

அரண்மனை, நாயக்கர் கால சத்திரம் முதலியன இருந்து அழிந்த தடயங்கள் காணப்படுகின்றன. காவிரியின் கரையில் முதுமக்கட்தாழி உறை கிணறு இருந்து அதன் உடைந்த பகுதிகள் கிடைக்கின்றன. காவிரியின் வடகரையில் 2½ கி.மீ. சுற்றளவு உடைய ஊர். பெருங்கற்காலம் தொடங்கி, சங்ககாலம், சோழர்காலம், ஆங்கிலேயர் காலம் வரை வரலாற்றுச் சுவடுகள் தொடர்ந்து காணப்படுகின்றன. ஊரின் கிழக்கில் அழகியநாதேஸ்வரர் திருக்கோயில் வழிபாட்டில் உள்ளதும் அறியப்பட்டன.

### *11. வானாதிராஜபுரம்:*

மயிலாடுதுறை வட்டத்தில் காவிரியாற்றின் வடகரையில் உள்ளது. இங்கு சோழர் காலக் கோயில் இருந்து இடிந்ததற்கான தடயங்கள் உள்ளன. அக்கால உடைந்த செங்கல் கட்டடம் உள்ளன. தற்போது நெல் அடிக்கும் களமாக மாறி உள்ளது. ஒரு பகுதியில் கருவேலமரம், தூங்குமூஞ்சி மரங்கள் உள்ளன. சோழன் கோச்செங்கணான் கட்டிய கோயில் இருந்து அழிந்து விட்டதாகக் கூறினர். உறைகிணறு மற்றும் முதுமக்கட்தாழியின் உடைந்த பகுதிகள், மட்பாண்டங்களின் ஓடுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

அழிந்த சிவன் கோயிலின் ஆவுடையார் பகுதிகள் -2, கோமுகம்-2, அரண்மனையில் மரத்தூண் நடப்பட்டிருந்த கருங்கல் (நடுவில் சதுர துளையுடன்) பீடம் - 1 காணப் படுகின்றன. வானாதிராயர்கள் - இங்கு வாழ்ந்து வருவதால் ஊரும் அப்பெயரில் - வானாதிராயர்புரம் என்று இருந்து பிறகு வானாதிராஜபுரம் என்று வழங்கப்படுகிறது.

காவிரி ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள செழிப்பான நஞ்சை நிலப்பகுதி மிகுந்த ஊர். சிவன் கோயில் அழிந்து விட்டது. அருள்மிகு கோபாலகிருஷ்ண பெருமாள் கோயில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு அக்ரகாரத்தில் வழிபாட்டில் உள்ளது.

காவிரிக்கரையில் அமைந்த தொன்மையான ஊர்களுள் இதுவும் ஒன்று. செவ்வக பீடத்தில் பெரிய நந்தி - தனி மேடையில் வழிபாட்டில் உள்ளது.

கங்கைகொண்டசோழபுரம் போல் இங்கும் கோயிலும் அரண்மனையும் இருந்து அழிந்துள்ளன என்பது சான்றுகளால் புலனாகிறது. சங்க காலத்திற்கும் முற்பட்ட ஊர். இங்கு அகழாய்வு செய்ய ஏற்ற இடம் உள்ளன.

**வானாதிராஜபுரம் - வடக்கு - செங்கமேடு திடல் :** இத்திடலில் பல தலைமுறையாக (1) வீரன், (2) முனீஸ்வரர் வழிபாடு நடத்தப்பட்டு வருகிறது. சுடுமண் உருவங்கள் இருந்து அழிந்துவிட்டது. பாதி தோப்பு வயல்வெளி ஆகிவிட்டன. இந்த செங்கமேடு திடல் தொன்று தொட்டு வழிபாட்டில் ஊர் மக்களால் நடைமுறையில் இருந்து வருகிறது. கெண்டியின் மூக்குப் பகுதி, சுடுமண் மட்பாண்ட ஓடுகள் கிடைத் துள்ளன. இப்பகுதியில் அகழாய்வு செய்தால் மேலும் பல சான்றுகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

இவ்வூர் கிராம நிர்வாக அலுவலர் திரு. சுப்பிரமணியம் அவர்களுடன் சென்று ஆய்வு செய்யப்பட்டன. (1) கருப்புசாமி கோயில் (2) புங்கமரத்தமன் கோயில் (3) சுப்பிரமணிய சுவாமி கோயில் (4) விநாயகர் கோயில் (5) அய்யனார் கோயில் ஆகியனவும் வழிபாட்டில் உள்ளன.

இவ்வூர் வடக்கில் ஒரு கி.மீ.யில் செங்கமேடு எனும் பகுதியில் இடிந்த சிவன் கோயில் உள்ளது. தனிலிங்கமும் தனி நந்தியும் உள்ளன. மரங்களும் சுற்றிலும் உள்ளன. முன்பு சோழர் காலத்தில் (கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டு) கோயில் இருந்து இடிந்து உள்ளது. இங்கு திரு.ராயர் என்பவரின் புஞ்சைத் திடலில் இரண்டு ஆண்டுகட்கு முன்னர் முதுமக்கட்தாழி கிடைத்துள்ளன. அவை உடன் சிதைந்து உடைந்து விட்டதால், சில பகுதிகள் மட்டும் காணப்பட்டன. இது கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். மேலும் இவ்வூரில் "தேவடியாள் பங்கு" என்ற நஞ்சை நிலப் பகுதியும் உள்ளன என்பதும் கள ஆய்வில் சேகரிக்கப்பட்டுள்ளன. ராயர் எனும் பட்டம் உடைய வன்னியர் இன மக்களே இங்கு பெரிதும் வசிக்கின்றனர்.

### *12. மல்லியம்:*

மயிலாடுதுறை வட்டத்தில் இவ்வூர் உள்ளது. மதிற் காவல் மிக்க ஊர் என்ற பெயரில் மல்லியம் - என்று வழங்கப்படுகிறது. ஐயனார் மேட்டில் முதுமக்கட் தாழி கிடைத்ததாக கூறுகின்றனர். மேற்பரப்பாய்வில் தாழியின் ஓடுகள் காணப்படுகின்றன. தாழியின் ஓடுகள் பிற்கால மட்கலங்களின் ஒடுகள். காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள மல்லியத்தில் தாழிகள் சில இடங்களில் கிடைத்துள்ளன.

இவற்றுடன் மட்கலங்களின் ஓடுகளும் இருந்துள்ளன. காவிரியின் தென்கரையில் சேத்திரபாலபுரம் என்ற ஊரிலிருந்து மல்லியம் வரை காவிரியின் கரையில் நடந்து சென்று ஆய்வு செய்ததில் பெருங்கற்கால மக்கள் காவிரியின் கரையை ஒட்டிய பகுதியில் வாழ்ந்துள்ளனர் என்பது தெரிய வருகிறது. ஊர் நடுநிலைப் பள்ளிக்கு மேற்கே சாலையை ஒட்டியுள்ள குளத்தின் நடுவில் தூர் வாரியபோது உறை கிணறு, உடைந்த தாழிகள், மக்கிய நெல்லி மரக் கட்டைகள் கிடைத்துள்ளன. குடிநீர் குளிர்ச்சியாகவும், சுத்தமாகவும் இருக்கவே கிணற்றின் அடியில் நெல்லிமரக் கட்டைகளை முற்காலத்தில் செருகி வைத்தனர் என்ற விபரமும் தெரிகிறது. வருவாய் ஏடுகளில் இவ்வூர் ஆனை மேலகரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

### *13. மூவலூர்:*

மயிலாடுதுறை வட்டத்தில் காவிரியின் தென்கரையில் அமைந்துள்ளது. தேவாரப் பாடல் பெற்றத் திருத்தலம். அருள்மிகு வழித்துணை நாதர்கோயிலில் "ஜெயங்கொண்ட சோழ வளநாட்டு திருவிழந்தூர் நாட்டு உடையார்" என்று கல்வெட்டு இறைவனைக் கூறுகின்றது.

இக்கோயிலில் முருகன், லட்சுமி, சண்டிகேஸ்வரர் ஆகிய கற்சிற்பங்கள் கி.பி. 8-9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. உதிரி கற்களைக் கொண்டு காவிரியின் தென்கரையில்

நீராழிமண்டபம் ஒன்றும் காட்டப்பட்டுள்ளது. நுழைவாயிலின் அருகில் (முருகன் சன்னதி) முன்பாக நவகண்ட சிற்பம் (நினைவுக்கல்) ஒன்று கி.பி.15-16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது உள்ளது. மூன்று வகை + வேளிர் பேரூர் இது. எனவே மருவி மூவலூர் எனப்படுகிறது.

குத்தாலம் மற்றும் மூவலூர் பகுதிகளில் நவகண்ட சிற்பங்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. வரலாற்று சிறப்பு வாய்ந்த மண்மேடு இங்கு எதுவும் இல்லை.

கண்டியூருக்கு தென்கிழக்கில் 5 கி.மீ.யில் உள்ள பழைய பேரூர் மூன்று வகை வேளிர் இனம் வாழ்ந்ததால் மூன்று+வேளிர்+ஊர் = மூவலூர் என்று வழங்கப்படுகிறது. அருள்மிகு மார்க்க சகாய சுவாமி திருக்கோயில் என்ற பெரிய கோயில் பல மண்டபங்கள் கொண்டு மிகப் பொலிவுடன் தோற்றமளிக்கிறது.

இது கவிச் சக்கரவர்த்தி கம்பரின் தாய் பிறந்த ஊர் ஆகும். அதற்கானச் சான்றுகள் உள்ளன. இங்கு தேரும் திருக்குளமும் 5 கோயில்களும் உள்ளன. தற்போது கள ஆய்வின் போது சிவன் கோயில் எதிரில் உள்ள ஒரு சன்னதியில் "நவகண்டம் சிற்பம் நடுகல்" இருப்பது கண்டறியப்பட்டது. நின்ற நிலையில் உள்ள மாவீரனின் இடுப்பில் குறுவாள் நெடுவாள் (2 வாள்கள்) உள்ளன. இது கி.பி. 13-ஆம் நூற்றாண்டு என கருதப்படுகிறது. இது தேவாரப் பாடல் பெற்ற திருத்தலம் ஆகும். இவ்வூரில் தான் திருவாவடுதுறை ஆதினத்தைத் தோற்றுவித்த அருளாளர் நமச்சிவாயமூர்த்திகள் தோன்றினார்.

### *14. குத்தாலம்:*

காவிரியின் தென்கரையில் அமைந்துள்ளது. இங்கிருந்த பழைய மண்மேடுகள் அனைத்தும் தற்போதைய வாழ்விடங்களாக மாற்றப்பட்டுவிட்டன. குத்தாலம் புகைவண்டி நிலையத்தின் அருகிலுள்ள மேற்குபக்கமுள்ள ரயில்வே கேட்டின் அருகில் அரச மரத்தடியில் அமர்ந்த நிலையில் உள்ள புத்தர் சிற்பம் ஒன்று உள்ளது.

புத்தரின் தலையில் உன்னிசமும், பட்டையான ஆடையும், தியானமுத்திரையுடன் கூடிய கைகளும், உள்ளதால் கி.பி. 9-10ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பதை உறுதி செய்கின்றன.

இங்கு மேற்கு குத்தாலம் ராஜகோபாலபுரம் என்று அழைக்கப்படுகிறது. இங்கிருந்து பழங்காவேரி என்ற ஆறு தொடங்கி குத்தாலம் மணல்வெளி பகுதிவழியாகப் பாய்ந்து வாய்க்கால் போல் ஓடுகிறது.

குத்தாலத்தில் வந்து சேரும் காவிரியாறு குத்திட்டு திரும்பி வடக்காகச் சென்று திருவேள்விக்குடி வரைச் சென்று பிறகு மீண்டும் கிழக்காகச் செல்கிறது. ஆலம் என்றால் நீரால் சூழ்ந்த பகுதி என்று பொருள். எனவே குத்தாலம் என்றால் ஆற்றிடைக்குறை என்று கூறப்படுகிறது. இதனையே மூவர் தேவாரப் பாடல்கள் 'திருத்துருத்தி' என்றும் செப்புகின்றன.

குத்தாலத்தில் 5 சிவன் கோயில்கள், 5 பிள்ளையார் கோயில்கள், 5 அம்மன் கோயில்கள், 2 முருகன் கோயில்கள் மற்றும் ஐயனார் கோயில், பிடாரி கோயில், 3 பெருமாள் கோயில்களும் உள்ளன.

பல்லவர் கால கல்வெட்டுடன் கூடிய நடுகல் சிற்பம் உத்திரகீழ வீதியில் உள்ளது. கார்த்திகை மாதம் கடைசி ஞாயிறு அன்று எல்லாக் கோயில்களின் சுவாமிகளும் புறப்பட்டு காவிரிபடித்துறைக்கு வந்து காட்சி கொடுப்பது இதன் பெருவிழா சிறப்பாகும். இதன் வடக்கே 1. காவிரி 2. விக்ரமன் ஆறு 3. காளியாறு 4. பழவாறு. 5. வீரசோழன் என்ற ஐந்து ஆறுகள் பிரிவதால், “அஞ்சாறுவாய்த்தலை” என்ற சந்திப்பும் உள்ளது. தற்போது அஞ்சலாறு என்று அப்பகுதிக்குப் பெயர்.

இவ்வாறு செம்பியன் கண்டியூரைச்சுற்றி நான்கு பக்கங்களிலும் உள்ள ஊர்களில் சிற்பங்கள், கோயில்கள், கல்வெட்டுகள், இடிந்த நிலையில் பழைய திருக்கோயில்கள், பூமிக்கு அடியிலிருந்து கிடைத்த அரிய தொல்லியல் தடயங்கள் ஆய்வு செய்யப்பட்டன. இதனால் காவிரிக்கரையின் இரு மருங்கிலும் சங்க காலத்திற்கு முன்பே சிறந்த நாகரிகம் நிலவியது என்பதை நன்கு உணர முடிகிறது.

### *15. கூறைநாடு:*

மயிலாடுதுறை நகரின் மேற்கு பகுதியாக விளங்குகிறது. காவிரியின் தென்கரையில் அமைந்துள்ளது. கூறை என்றால் ஆடை. சங்க காலச் சொல், சங்க காலம் முதல் மகளிர் திருமணத்தின் போது இக்காலம் வரை கட்டுவது கூறை சேலை - என்ற பெயரால் வழங்கப்படுவதிலிருந்து கூறைநாட்டின் - சேலையின் தரத்தை அறியலாம், இவ்வூரில் அரண்மனை ஒன்று இருந்து அழிந்து விட்டது. அப்பகுதிக்கு ‘கள்ளக்குறிச்சி’ என்று பெயர் உள்ளது. மாரியம்மன் கோயிலுக்கு கோட்டை மாரியம்மன் என்று பெயர், அதுவும் வழிபாட்டில் உள்ளது. அருகில் ‘சாலியர் மகாஜனம்’ - எனும் குழுவினரின் ஸ்ரீசபாபதி கோயில் உள்ளது. இவர்கள் சிதம்பரத்திலிருந்து இங்கு நெசவுத்தொழில் செய்ய வந்து குடியேறியவர்கள். இந்த சபாபதி கோயில் நாயக்கர் காலக் கலையில் கட்டப்பட்டுள்ளது. இதன் முன் மண்டபச் சுவரில் மராட்டியர் கால ஓவியமும் உள்ளன.

அதில் 1. திருக்கடையூர் மார்க்கண்டேயர் வரலாறு 2. ஆயர்பாடி கண்ணனின் லீலைகள் போன்றவை கோயிலில் எழிலாக சுவர் ஓவியத்தில் உள்ளது. இந்த மராட்டியர் கால ஓவியம் முன் மண்டபச் சுவரில் பல கட்டடங்களில் தீட்டப்பட்டுள்ளது. ஸ்ரீ சபாபதீஸ்வரர் திருக்கோயில் உள்ளே உள்ள வெண்கல மணியில் 6 வரி கல்வெட்டு பொறிப்பு உள்ளது.

ஆந்திராவின் காம்பீலி எனும் பகுதியில் இருந்து கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் தெலுங்குச் சாலியர் என்ற வகுப்பினர் இப்பகுதியில் வந்து குடியேறியுள்ளனர். நெசவு இவர்களது தொழில். இன்றும் 3 தெருக்களில் வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதி, “தனியூர்

சாலியத் தெரு" என்று வழங்கப்படுகிறது. இவர்கள் 'சிதம்பரம் ஆடல்வல்ல பெருமானிடம் பக்தி' அதிகம் வைத்துள்ளனர். அதனால் தான் இங்கு ஸ்ரீசபாபதி கோயில் கட்டி வழிபாடு செய்கின்றனர். இவ்வூருக்கு வருவதற்கு முன்னர் அவர்களின் மூதாதையர் சிதம்பரத்தில் குடியேறி வாழ்ந்துள்ளனர். பின்னர் அவர்களில் ஒரு பகுதியினர் நெசவுக்காக இவ்வூரில் வந்து குடியேறினர். எனவே சிதம்பரம் பொன்னம்பலநாதனின் பெயரில் ஸ்ரீசபாபதி கோயில் என்ற பெயரில் இங்கும் 18-ஆம் நூற்றாண்டில் கோயில் கட்டி வழிபட்டு வருகின்றனர்.

### *16. கடலங்குடி: செங்கமேடு திடல்:*

விக்கிரமன் ஆற்றின் கீழ்க்கரையில் இவ்விடம் அமைந்துள்ளது. சோழ மன்னர்கள் காலத்தில் இத்திடலில் சிவன்கோயில் இருந்துள்ளது. திருவிழாக்கள் நடந்தன. இக்கோயிலுக்குரிய நந்தி வானாதிராஜபுரத்தில் தனி மேடையில் உள்ளது. இங்கிருந்து பல சிற்பங்கள் இடம் பெயர்ந்து விட்டன. பழைய சிவன் கோயில் இருந்து அழிந்து விட்டது. லிங்கம் சந்திரகாந்தக் கல்லால் ஆனது. நேர்த்தியானது. ஊரார் தற்போது கீற்றுக் கொட்டகைக் கட்டி மீண்டும் வழிபாடு செய்து வருகின்றனர்.

### *17. ஆனந்தக்குடி:*

மயிலாடுதுறை வட்டம் - காவிரியின் வடகரையில் மாப்படுகைக்கு வடக்கே 2 கி.மீ.யில் அமைந்துள்ளது. சோழர் கால (கி.பி.10-11-ஆம் நூற்றாண்டு) சிவன்கோயில் ஒன்று இருந்து அழிந்துவிட்டது. ஆந்தகுடி - என்ற ஊரின் பழைய பெயரே மருவி இன்று வழங்கப் படுகிறது. அதாவது தமிழ்த் தொல் குடியிருப்பு - என்று இதற்குப் பொருள் கொள்கின்றனர்.

அதன்பின் கட்டப்பட்ட பெருமாள்கோயிலும் அழிந்துவிட்டது. பல்லவர்க்கு முற்பட்ட பிடாரி அம்மன் கோயில் இருந்து அதுவும் அழிந்துவிட்டது. அங்குள்ள ஆலமரத்தடியில் இன்றும் வழிபாடு நடந்து வருகிறது. சோழர்கால செங்கல் சுவர்களின் பதிவுகள் உள்ளன. தற்போது (கி.பி.9-10ஆம் நூற்றாண்டு) ஸ்ரீபாலசாஸ்தா கோயில் மட்டும் வழிபாட்டில் உள்ளது.

மேலும் இவ்வூர் திருக்குளக்கரையில் தலை உடைந்த நிலையில் சோழர் கால ஆலமரச்செல்வன் கலையம்சத்துடன் (கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டு) சிற்பம் உள்ளது. திருக்குளக்கரையில் காணப்படுகிறது. திருக்குளம் சிவன்கோயில் திடலின் கிழக்கில் உள்ளது. சில கற் சிற்பங்களும், கருங்கல் படித்துறையும் மண்மூடி உள்ளன. காவிரியின் வடகரையில் இதுவும் ஒரு தொன்மையான ஊர். தலவிருட்சமாக கூந்தல் பனை மரம் அய்யனார் கோயில் முன் திடலில் உள்ளது.

### *18. விக்ரமன் மணலூரர்:*

மயிலாடுதுறை வட்டத்தில் இவ்வூர் உள்ளது. விக்கிரமன் ஆறு, காளி வாய்க்கால் இரண்டுக்கும் நடுவில் உள்ள செழிப்பான பகுதி - ஆனந்தக்குடியைச் சேர்ந்த ஊர். இரண்டு ஆறுகள் ஊரை ஒட்டிச் செல்கின்றன. முன்பு மணல்மேடு எனும் திட்டுப் பகுதிகள்

இருந்துள்ளன. அவை செங்கல் சூளை போட்டதால் நாளடைவில் அழிந்து விளை நிலங்களாக மாறிவிட்டன. 'மணலூர் கிழான்' எனும் குறுநிலத்தலைவன் வாழ்ந்துள்ளான். சோழர் காலத்தில் மேம்பட்ட ஊர்களில் இதுவும் ஒன்று. 1) பிள்ளையார் கோயில் 2) வீரனார் கோயில் உள்ளன. இவை 100 ஆண்டு பழைமையானவை.

செம்பியன் கண்டியூர் என்பதுபோல இவ்வூர் விக்கிரமன் மணலூர் என்று முன்னாளில் வழங்கி வந்துள்ளது. தற்போது மணலூர் என்றே கூறுகின்றனர்.

### *19. கீழநாஞ்சில்நாடு:*

மயிலாடுதுறை நகரின் கிழக்குப் பகுதியாக உள்ளது. நாஞ்சில் என்றால் உழவுக் கலப்பையைக் குறிக்கும். அதாவது விவசாயம் செழிப்பாக உள்ள காவிரி கரை ஊர். இவ்வூரில் முன்னாளில் நீர்த்தேக்கம் ஒன்று இருந்துள்ளது. காளவாய் போட புல்டோசர் கருவி மூலம் மண் தோண்டிய போது பூமிமேல் மட்டத்திலிருந்து 5 அடி ஆழத்தில் தென் வடக்காக சற்று வளைவாக 4 அடி அகலத்தில் 40 அடி நீளத்தில் பெரிய செங்கல் சுவர்ப் பகுதி கிடைத்துள்ளது. இதில் 2 சுடுமட் குழாய்கள் பதிந்து இருந்தன. ஒன்று, உடைந்து விட்டது. ஒன்று பாதுகாப்பாக எடுத்துச் சென்று பூம்புகாரில் அகழ்வைப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளது. சீர்காழி - வட்டம் வாணகிரியில் 30 ஆண்டுகட்கு முன்பு நடுவண் அரசு தொல்லியல் துறை மூலம் அகழாய்வில் வெளிவந்த நீர்தேக்கம்போல் இதுவும் இருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது.

மயிலாடுதுறை நகரின் கிழக்கில் தரங்கம்பாடி செல்லும் சாலையில் இவ்வூர் அமைந்துள்ளது. சங்ககால நீர்த் தேக்கம் என்று கருதப்படும் செங்கல் சுவர்ப் பகுதி பூமிக்கு அடியில் உள்ளது. அரை வட்ட வடிவில் சுமார் 40 அடி நீளத்தில் 10 அடி ஆழத்தில் 3 வகையான செங்கல் சுவர்ப் பகுதி காணப்படுகிறது. சுவரில் நடுப்பகுதியில் சுடுமண் குழாய்-2 இருந்துள்ளது. ஒன்று நீர் பாய்ந்து உட்செல்லவும், மற்றொன்று தேக்கி வைக்கப்பட்ட நீர் பாசனத்திற்கு வெளியேற்றவும் பயன்பாட்டில் இருந்துள்ளது.

பெரிய மட்பாண்டம் (முதுமக்கட் தாழி) இருந்து உடைந்து விட்டது. அதன் வரம்பு மற்றும் உடைந்த பகுதிகளும் கிடைத்துள்ளன.

மூன்று வகை செங்கல் கிடைத்தன. அவை : - 1) சங்கம் 2) பல்லவர் 3) சோழர் காலம். மேலும், 1) ஸ்ரீமுத்தாட்சி அம்மன் 2) வீரனார்கோயில் 3) விநாயகர் கோயில் போன்ற கோயில்களும் உள்ளன. இவை கி.பி. 17-ஆம் நூற்றாண்டு.

மயிலாடுதுறை நகராட்சி நான்கு பக்கமும் 5 கி.மீ.க்கு பரந்து விரிந்த நகராட்சியாக இன்று விளங்குகிறது. நாஞ்சில் வள்ளுவன் எனும் மரபினர் குமரி நாட்டிலிருந்து தமிழ் வளர்க்க இங்கு வந்து குடியேறியதாகவும், அவர்களின் அடிப்படை தொழில் விவசாயம் என்றும் கூறுகின்றனர். மயிலாடுதுறை நகராட்சியில் கீழநாஞ்சில்நாடு - மேலநாஞ்சில்நாடு

எனும் பகுதி 3 கி.மீ. நீளத்தில் அமைந்துள்ளது. எல்லையில் கிழக்கிலும் மேற்கிலும் முத்தாட்சி அம்மன்கோயில் எல்லையாக இன்றும் உள்ளன. எனவே சங்க காலததில் பயிர் நிலப் பாசனத்திற்காக இங்கு நீர் தேக்கம் (ஏரி) வடிவமைக்கப்பட்டது ஆய்வில் புலப்படுகிறது.

### *20. திருஇந்தளூர்:*

மயிலாடுதுறை நகரின் கிழக்குப் பகுதியாக இவ்வூர் அமைந்து உள்ளது. காவிரியின் வடகரையில் உள்ளது. இங்குதான் திருமங்கை ஆழ்வாரால் மங்கலாசாசனம் செய்யப்பட்ட அருள்மிகு பரிமள ரெங்கநாதர் கோயில் உள்ளது. மயிலாடுதுறையின் கிழக்கே காவிரிக்கரையில் உள்ள தோப்புத் தெருவில் திரு. அம்பலவாணன், வயது 52 என்பவரின் வீட்டுத் தோட்டத்தின் அருகில் உள்ள வாய்க்கால் கரையில் நகராட்சியினர் கழிவு நீர்த்தொட்டி கட்டுவதற்கு, புல்டோசர் கருவி கொண்டு தோண்டியபோது (1) உறை கிணறுகள் பகுதிகள் (2) முதுமக்கட் தாழியின் பகுதிகள் (தோண்டும்போது உடைந்தவை) சேகரித்து எடுத்துச் சென்று தரங்கம்பாடி அகழ்வைப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

அருள்மிகு பரிமளரெங்கநாதர் கோயில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு மங்களாசாசனம் பெற்றது. இக்கோயிலில் 5 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன.

மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட இப்பகுதியும் நீர்வளமும் நிலவளமும் மிகுந்ததாகும். இன்றும் 20 அடி ஆழத்தில் குடிநீர் சுத்தமாக கிடைக்கிறது. இப்பகுதியிலும் 2000 ஆண்டுகட்கு முன்பிருந்து ஆங்கிலேயர் காலம் வரை தொன்மைச் சிறப்புடன் மக்கள் இருந்து வந்ததற்கான தடயங்கள் கிடைத்துள்ளன.

### *21. கஞ்சாநகரம்:*

தரங்கை வட்டத்தில் காவிரியாற்றின் வடகரையில் அமைந்த ஊர். கஞ்சம் என்றால் பொன் என்று கூறப்படுகிறது. பொன்நகர் - என்பதே கஞ்சாநகரமாக ஆயிற்று. பெரியமேடு எனும் பகுதியில் பிடாரிக் கோயில் ஒன்று உள்ளது. பெருமாள் கோயில், செல்லியம்மன் கோயில், அய்யனார்கோயில், தனிமுருகன் கோயில் வழிபாட்டில் உள்ளன. இவை கி.பி. 17ஆம் நூற்றாண்டு ஆகும். இங்கு கல்வெட்டுகள் ஏதும் இல்லை.

இங்கு புத்தர்பெருமானின் உடைந்த தலைப் பகுதி நீண்ட காலமாக இருந்துள்ளது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டு. சிவன்கோயில் செங்கல் திருப்பணி வாயில் அருகால் நிலைக் கல்லில் இரண்டு இடங்களில் சோழர் காலக் கல்வெட்டு உள்ளன. தேவாரப் பாடல் இல்லை. மாமரத்தடியில் தலை உடைந்த நிலையில் சோழர் கலையில் 2 சிற்பம் உள்ளன.

இவ்வூர் முற்காலச் சோழர் பெருவழியாகையால் நாயக்கர் கால சத்திரம் ஒன்றும் உள்ளது. முற்காலத்தில் புத்த மதம் இங்கு பரவியிருந்தது என்பதும் தெரிகிறது. புத்தர் தலைப் பகுதி கிராம நிர்வாக அலுவலர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளது என்றனர். இதுவும் சோழர் காலத் தொன்மையான ஊர்களுள் ஒன்றாகும்.

### 22. கீழ்மணக்குடி: (கீழிருப்பு)

மயிலாடுதுறை வட்டத்தில் காவிரியின் வடகரையில் உள்ளது. முற்காலத்தில் இங்கு வந்து கோயில் திருவிழாவில் நாட்டிய மகளிர் ஆடிய பின்பு திருப்பதி வெட்டி எனும் காவிரிக்கரை பாதையைக் கடந்து தெற்கே செம்பனார்கோயில் சென்று திருக்கடையூர் வரை சென்றதாகக் கூறினார். இங்கு காவிரிக்கரையில் 15 ஆண்டுகட்கு முன்பு "பெரிய முதுமக்கட்தாழி" கிடைத்ததாகக் கூறினார். தற்போது இல்லை. "முத்தையன் திருக்குளம்" எனும் கோயில் திருக்குளம் பெரிதாக உள்ளது. ஒரு யானை நுழைந்து செல்லும் அளவுக்கு அமைக்கப்பட்ட பாதை, 'கூழைவெட்டி பாதை' எனப்பட்டது. நாட்டிய மங்கையரை பல்லக்கில் தூக்கிச் சென்று செம்பனார்கோயில் வழியாக திருக்கடையூரில் விட்டது அவ்வழியாகும்.

ஸ்ரீசிதம்பரநாதர் - சிவகாமி அம்மன் சிவன்கோயில் அடிபீடம் வரை உள்ளது. அக்கருங்கல் பீடம் குமுதம் வரை உள்ளது. 2 கல்வெட்டுகள் உள்ளன. கோயிலுக்கு நிலதானம் அளித்த செய்தி அதில் உள்ளது. மூன்றாம் குலோத்துங்க சோழன் காலம். கோயிலின் மேல்கூரை கீற்றால் கொட்டகையாகக் கட்டப்பட்டுள்ளது. திருப்பணி நடந்து வருகிறது.

சோழர் பெருவழியில் அமைந்த பழைய் ஊர்களுள் இதுவும் ஒன்று. சோழர் காலத்தில் கோயில் கட்டத் தொடங்கி ஆரம்பத்திலேயே நின்று விட்டது. சுதை வேலைத் திருப்பணி செய்ய சுண்ணாம்பு அரைத்த வட்ட பீடம் தனியே முட்புதரில் உள்ளது. சிதம்பர முனிவர் எனும் சித்தர் இங்கு அடக்கமானதாகவும் கூறுகின்றனர். முன்பு கட்டப்பட்ட அம்மன் சன்னதி, சுப்பிரமணியர் சன்னதி அழிந்துவிட்டன.

சித்தம் பிள்ளையார் - தனி சன்னதி உள்ளது. மாணக்கஞ்சார நாயனார் இங்கு தங்கி வாழ்ந்ததாக கூறுகின்றனர். நின்றநிலையில் தண்டாயுதபாணி சிற்பமும் பிள்ளையார் சந்நதியில் கால் பகுதி உடைந்த நிலையில் காணப்படுகிறது.

### 23. கருவாழக்கரை - மேலையூர்:

பூம்புகார் செல்லும் சாலையில் இவ்வூர் உள்ளது. ஊரின் நடுத் திடலில் பண்டைய பானை ஓடுகள் கிடைக்கின்றன. முன்பு குடியிருப்பு இருந்து அது அழிந்து விட்டது. உறை கிணறு பகுதிகள், உடைந்த மட்பாண்ட பகுதிகள் கிடைக்கின்றன. தற்போது தரங்கை வட்டத்தில் மேலையூர் உள்வட்டமாக (பிர்கா) அமைந்த பேரூர். மேலையூர் வாய்க்கால் எனும் பகுதி காவிரியின் பிரிவாக உள்ளது.

சோழர் பெருவழிக்கு வடக்கே 2 கி.மீ. தள்ளி உள்ள ஒரு பேரூர் இதுவாகும் நஞ்சை செழிப்பு மிக்கது. சோழர் காலம், விசயநகரர் காலத் தடயங்கள் காணப்படுகின்றன. கிராமிய தேவதைகள் சிறப்பு வழிபாட்டில் உள்ளது. இங்குள்ள அருள்மிகு மாரியம்மன் கோயிலில் பூசாரி அமர்ந்து குறி சொல்லும் மேடு உள்ளது. இவை 17ஆம் நூற்றாண்டு ஆகும்.

### *24. உப்புநகர்:*

இவ்வூர் பழங்கால வணிகர்கள் வாழ்ந்த இடம். பூம்புகார் உப்பு வணிகர்கள் பெரும்பான்மையர் வாழ்விடம். மற்ற பொருட்களும் இறக்குமதியில் இருந்துள்ளன. இவ்வூர் காவிரி தென்கரையில் அமைந்துள்ளது.

எனவே கடலில் இருந்து பாய்மரக் கப்பலில் மயூரப்பட்டனம் (மயிலாடுதுறை) வரை பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி நடந்துள்ளன. இவ்வூரிலும் ஒரு படகுத்துறை இருந்துள்ளது அறியப்படுகிறது.

திரௌபதியம்மன் கோயில், மாரியம்மன் கோயில், விநாயகர் கோயில்கள் உள்ளன. சோழர் பெருவழியில் அமைந்த ஊர். வணிகக் குழுக்கள் இங்கு தங்கியிருந்ததற்கான தடயங்கள் உள்ளன. பெரும்பகுதி நத்தம் அழிந்துவிட்டன. சில மேட்டுத்திடல் பகுதியில் கிராமிய தேவதையின் கோயில்கள், கட்டப்பட்டுள்ளன. செழிப்பான நஞ்சை நிலப்பகுதியாக தற்போது உள்ளது.

### *25. கருவாழக்கரை : கீழையூர்*

மேட்டுப்பாங்கான புஞ்சை நிலப்பரப்பு மிக்க ஊர். தேவாரம் பாடல் பெற்ற சிவன் கோயில் உள்ளது. தேவாரத்தில் இவ்வூர், 'திருக்கடைமுடி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இறைவன், 'திருகடைமுடிநாதர்' என்றும் அழைக்கப்படுகிறார். முழுதும் கற்றளியால் ஆனது.

முன்பு சங்க காலத்தில் பூம்புகார் பட்டினம் இதுபோல் கிழக்குப் பகுதி கீழையூர் என்றும் மேற்குப் பகுதி மேலையூர் என்றும் வழங்கப்பட்டது போல் இவ்வூரும் பேரூராக உள்ளது. சோழர்கள் திருமுடி சூடும் அரண்மனை இருந்த இடங்களில் இதுவும் ஒன்று.

அய்யனார் கோயில், மாரியம்மன் கோயில், ருத்திராபதி கோயில்கள் உள்ளன. காவிரி ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்பு பெற்ற ஊர்களுள் இதுவும் ஒன்று. பழைய பூம்புகார் நகர் புயல் சீற்றத்தால் அழிந்த பின்பு அதே பெயரில் உள்நாட்டில் காவிரியின் வடகரையில் சோழர் பெருவழியின் வடக்கு பக்கத்தில் வணிகர்கள், வேளாளர்கள் சேர்ந்து வாழ்ந்த குடியிருப்புப் பகுதியாகும். பூம்புகாரின் மேற்கு எல்லையாகவும் இவ்வூர் இருந்திருக்க வேண்டும் என உணர முடிகிறது.

### *26. மேலப்பாதி:*

தரங்கை வட்டத்தில் காவிரியின் வடகரையில் அமைந்த நடுக்கரை ஊராட்சியில் உள்ள ஊர். 'பெருமாள்கோயில் திடல்' என்று அழைக்கப்படும் நத்தம் பகுதி உள்ளது. இவ்வூரின் மேற்கில் பெருமாள்கோயிலும், கிழக்கில் சிவன்கோயிலும் சோழர் காலத்தில் சிறப்புடன் விளங்கின. காலப்போக்கில் பெருமாள்கோயில் அழிக்கப்பட்டுவிட்டது. எனவே அவ்விடம் இன்றும், 'பெருமாள்கோயில் திடல்' என்று அழைக்கப்படுகிறது.

அருள்மிகு சுரகரேஸ்வரர் கோயில், பிள்ளையார் கோயில், திரௌபதியம்மன் கோயில், வீரனார் கோயில்களும் உள்ளன. திருமால், பூதேவியின் சிற்பங்கள், சப்த கன்னியரில் 5 தேவியர்கள், காவிரியின் குளத்தின் கரைகளில் கிடக்கின்றன. அவற்றுள் சில தலைப் பகுதியும், சில கைகளும் உடைந்துவிட்டன. பெருமாள்கோயில் திடல் பகுதியிலும் மற்றும் வெண்ணை ஈஸ்வரர் கோவில் திடல் பகுதியில் அகழாய்வு நடத்தினால் மேலும் வரலாற்றுச் சிறப்பு மிக்கத் தடயங்கள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. ஊரின் கிழக்குப் பகுதி கீழப்பாதி என்று வழங்கப்படுகிறது.

## *27. பள்ளக்கொல்லை:*

தரங்கை வட்டத்தில் காவிரியின் தென் கரையில் அமைந்த ஊர். சங்க காலத்தில் காவிரியின் இருமருங்கிலும் சுமார் 3 கி.மீ. தூரத்திற்கு இடைவெளியில், 'மழைநீர் சேகரிப்புத் திட்டம்' நிறைவேற்றப்பட்டுள்ளது. அதாவது மழைக்காலத்தில் காவிரியில் உபரியாகச் சென்று கடலில் விழும் நீரை வீணாகாமல் தேக்கி வைப்பதாகும்.

அதற்கு சுமார் 20 ஏக்கர் தரிசு நிலத்தை பெரிய ஏரியாக ஆழப்படுத்தி வெட்டி, கரையை உயர்த்தி உபரி நீரை தேக்கி வைப்பதாகும். மழை பெய்யாத நேரத்தில் இந்த ஏரியில் உள்ள நீரைச் சாகுபடிக்கு பயன்படுத்துவர். எனவே ஊருக்கு பள்ளக்கொல்லை என்று பெயர்.

இங்கு முனீஸ்வரர் கோயில், ஸ்ரீகிருஷ்ணன் கோயில், விநாயகர் கோயில்கள் உள்ளன. முன்பு நீர்த்தேக்கமாக இருந்த பெரிய ஏரி தூர்ந்துவிட்டதால் அவ்விடம் 'பள்ளக்கொல்லை' என்று இன்று வழங்குகிறது. தற்போது புஞ்சை பாங்கான நிலமாக ஊரின் பெரும்பகுதி விளங்குகிறது. காவிரியின் படுகையாதலால் எங்கும் பசுமையாக விளங்குகிறது. சோழப்பெரும் பாதையில் அமைந்துள்ள ஊர்களுள் இதுவும் ஒன்று.

## *28. கீழைத்திருக்காட்டுப் பள்ளி:*

காவிரியின் வடகரைத் தலங்களுள் ஒன்று. சங்க காலத்தில் சமணர்கள் வாழ்விடமாக இருந்த ஊர். சோழர் காலத்தில் சிவன் கோயில் எழுப்பப்பட்டுள்ளது. விநாயகர் கோயில், மாரியம்மன் கோயில்களும் வழிபாட்டில் உள்ளன. திருஞானசம்பந்தரின் பாடல் பெற்ற தலம். சோழர் பெருவழியில் காவிரியாற்றின் வடகரையில் அமைந்த பாடல் பெற்ற சிவத் தலங்களுள் ஒன்று. எனவே இவ்வூரும் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. பண்டைய சோழ அரசர்களின் அடக்கம் (புதைவிடமாக) விளங்கிய ஊர் என்றும் கருதப்படுகிறது.

## *29. காத்திருப்பு:*

திருக்கோயில் வழிபாட்டிற்காக மன்னன் மற்றும் சித்தர்கள் தங்கி காத்து கிடந்த இடம் (தவம் இயற்றிய இடம்) காத்திருப்பு என்று வழங்கி வருவதாக ஊர் பெரியவர் திரு.ஆ.மணி வயது 68 என்பவர் கூறினார்.

அய்யனார் கோயில், வீரன் கோயில், சித்தனார் கோயில்கள் உள்ளன. காவிரிக் கரையில் பிற்காலத்தில் அமைந்த ஊர்களும் இதுவும் ஒன்று.

### *30. பட்டவெளி:*

காவிரியின் வடகரையில் மாப்படுகை எனும் ஊரை அடுத்து அமைந்துள்ளது. பண்பட்ட பெருநிலப் பரப்பு என்று பெயர். வரலாற்று சிறப்புமிக்க பல்லவராயன் பேட்டையை ஒட்டி அமைந்துள்ளது. இங்கு காவிரியின் 3 வாய்க்கால்கள் பிரிவதால் மூன்று வாய்தலை என்றும் அழைக்கப்படுகிறது. அய்யனார் கோயில், பிடாரியம்மன் கோயில், காளி கோயில்கள் உள்ளன.

காவிரி வடகரையில் அமைந்த செழிப்பான ஊர். நன்செய் நிலம் பரந்துவிரிந்து உள்ளதால் பட்டவெளி என்று வழங்கப்படுகிறது. தொன்மையான ஊர்களில் இதுவும் ஒன்றாகும். இவ்வூரின் தெற்கே காவிரிக்கரையில் தீப்பாய்ந்தான் அம்மன் கோவில் உள்ளது. இதன் காலம் 17ஆம் நூற்றாண்டு.

### *31. சேந்தங்குடி:*

மயிலாடுதுறை நகரை ஒட்டி கிழக்கில் அமைந்த ஊர். இங்கு பசுபதீஸ்வரர் கோயில் (கி.பி. 12-ஆம் நூற்றாண்டு) உள்ளது. சோழர் கால சிற்பங்கள் உள்ளன. தற்போது மயிலாடுதுறை நகர் விரிந்து சென்றதால் இதுவும் அதனுடன் சேர்ந்து நகரின் ஒரு பகுதியாகவே காட்சியளிக்கிறது. சில திடல்கள் இருந்து அழிந்துவிட்டன.

துர்க்கையம்மன், படைவெட்டி மாரியம்மன், பிள்ளையார் கோயில்களும் வழிபாட்டில் உள்ளன. வள்ளலார் அகரம் எனும் சிற்றூரும் இங்கு உள்ளது. கோயில் திருக்குளம் பால்குளம் என்று வழங்கப்படுகிறது. சோழர் காலத்தில் இருந்து இந்த ஊர் சிறப்புடன் வழங்கி வந்துள்ளது. சோழர் பெருவழியில் மயிலாடுதுறைக்கு முன்பாக 2 கி.மீ.யில் அமைந்துள்ளது. காடவர்குல படைத்தலைவன் பெயரால் இவ்வூர் சேந்தன்குடி என்று வழங்கப்படுவது தெரிகிறது.

### *32. செம்பியன் மணக்குடி:*

மயிலாடுதுறை வட்டம், காவிரியின் வடகரையில் அமைந்த ஊர். அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் உள்ளது. இது விஜயநகரர் காலத்தைச் சார்ந்தது. ஆலமரத்திடல், இலுப்பமரத்துத் திடல் எனும் சாவடிகள் உள்ளன. இரண்டு வணிக வழிகள் சந்திக்கும் இடம் 1) கீழைச்சாலை (கிழக்கு கடற்கரை சாலை) 2) மேலைச்சாலை (காவிரிப் பெருவழி) இங்குள்ளது. இவ்வூருக்கு நேர் தெற்கில்-

காவிரியின் தென்கரையில் சிறப்புமிக்க , “திருத்தருமபுர ஆதீன மடம்” உள்ளது. இதற்கு இணையாக வடகரையில் இவ்வூர் நீர் வளம், நிலவளம் மிக்கதாய் அமைந்துள்ளது. மாணக்குடி (மேட்டுகுடியிருப்பு) எனவும் முன்னாளில் வழங்கி உள்ளனர். இதுவும் சங்ககால சிறப்பு பெற்ற பழைய ஊராகும்.

### 32a. கீழ் கஞ்சாநகரம்

இங்கு 5 பெரிய திருக்குளங்கள் உள்ளன. சிவன் கோயில் அருள்மிகு கார்த்த சுந்தரேஸ்வரர் கோயில் உள்ளது. இது கி.பி. 11-ஆம் நூற்றாண்டு திருக்கோயில் ஆகும். 2 கல்வெட்டுகள் உள்ளன. நாயன்மார்களில் ஒருவரான 1) மாணக்கஞ்சாரர் 2) ஏயர்கோன்கலிக்காமர் மற்றும் புனிதவல்லி கற்சிற்பங்களும் இக்கோயிலில் உள்ளது தனிச்சிறப்பாகும். கி.பி 12-ஆம் நூற்றாண்டு. பெருமாள் கோயிலும் சிவன் கோயிலும் ஒரே தெருவில் ஒன்றை ஒன்று பார்த்தபடி கிழக்கிலும் மேற்கிலும் அமைந்துள்ளன.

1. கன்னியர் எழுவர் கோயில், 2. ருத்திராபதியார் கோயில், 3. அய்யனார் கோயில், 4. பெருமாள் கோயில் ஆகியன வழிபாட்டில் உள்ளன. முற்காலத்தில் காவிரிக் கரையின் சோழப் பெருவழியில் மதுரை சென்ற கோவலன்-கண்ணகி தம்பதியினர் இவ்வூரில் ஒரு நாள் இரவு தங்கிச் சென்றதாக பெரியவர்கள் கூறுகின்றனர். காவிரியின் தென்கரையில் அமைந்த தொன்மையான பேரூர் ஆகும்.

### 33. கருங்குயில் நாதன்பேட்டை:

மயிலாடுதுறை வட்டம், மணக்குடியைச் சேர்ந்த ஊர். காவிரியாற்றின் வடகரையில் உள்ளது. மணிமேகலை காப்பியத்தில் குறிப்பிடப்படும் 'குயில் நுழைவரியா' எனும் பசுஞ்சோலையும் அடர்த்தியான மரத் தோட்டங்களும் நிறைந்த ஊராகும். இங்கு கருங்குயில் என்பது வெயில் உள்ளே நுழையாத அடர்நிழல் படிந்த ஊர் என்ற பொருளில் வழங்கப்படுகிறது.

சிவன்கோயில் (தருமை ஆதினக் கோயில்) - சுவர்ப்பகுதி கருங்கல்லால் ஆனது. மேல்பகுதி செங்கல் பணி. கி.பி. 13-ஆம் நூற்றாண்டு. சங்ககால சோழர் பெருவழியில் அமைந்த தாழ்வான பகுதி ஊர் ஆகும். கோயிலுக்கு மாந்தோப்பு, இலுப்பைத் தோப்பு, தென்னந்தோப்பு என்று புஞ்சை தோட்டங்கள் நிறைந்த நீர்வளம் மிக்க ஊர். வெய்யில் வெளியே தெரியாமல் நிழல் அடர்ந்த ஊர்தான் கருங்குயில்நாதன் பேட்டை, அருள்மிகு கருங்குயில்நாதன் என இறைவனுக்கும் பெயர் வழங்கி வருவதாயிற்று.

### 34. கிழிருப்பு:

மயிலாடுதுறை வட்டம், மணக்குடியைச் சேர்ந்த உட்கிராமம். அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயில் வழிபாட்டில் உள்ளது. புதையுண்ட பட்டினத்தார் கோயில் எனும் பகுதி காணப்படுகிறது. வலையர் என்று உள்நாட்டு மீனவர் இனத்தவர் இங்கு வாழ்கின்றனர். 2 சிவன் கோயில்கள் உள்ளன. ஒன்று தூங்கானைமாடம் வடிவு வழிபாட்டில் உள்ளது. செங்கல் பணி. மற்றது கருங்கல் பீடம் குமுதப்படை வரை எழுப்பி உள்ளனர். அதில் 2 கல்வெட்டுகள் உள்ளன. சோழர் காலம்.

மீனாம்பிகை கோயில், அய்யனார் கோயில், பிள்ளையார் கோயில்கள், காளியம்மன் கோயில் உள்ளன. இவ்வூரில் வரலாற்று சிறப்புமிக்க இடமோ, மேட்டுப்பகுதியோ இல்ல. இருப்பினும், சோழர் பெருவழியில் காவிரி ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது. பழைமையானது. பழைய ஊரின் கிழக்கே உருவாக்கப்பட்ட ஊர் எனவே கீழிருப்பு எனப்படுகிறது.

### *35. மருதூர்:*

மயிலாடுதுறை வட்டத்தில் காவிரியின் வடகரையில் அமைந்துள்ளது. காவிரியின் நீர்வளம் மிகுந்த ஊர். நெல், வாழை, கரும்பு சாகுபடி மிகுந்துள்ளதால் மருதம் நிலம் சார்ந்த (மிகுந்த) ஊர். எனவே மருதூர் என்று வழங்கப்படுகிறது. புஞ்சை நிலத்தோட்டம் துறவு (பெருங்கிணறு) இருந்த தடங்களும் உள்ளன. 1) ஸ்ரீவலையாத்தம்மன் கோயில் 2) இரட்டை ஆஞ்சநேயர் கோயில்கள் உள்ளன. கி.பி. 17-ஆம் நூற்றாண்டு முற்கால சோழர் பெருவழியில் அமைந்த ஊர்களுள் இதுவும் ஒன்று. எல்லா இன மக்களும் இங்கு வாழ்கின்றனர். சாலை ஓரத்தில் சத்திரம் ஒன்றும் இருந்துள்ளது. தற்போது அது அழிந்துவிட்டது. எனவே சங்க காலம் முதல் இவ்வூர் சிறப்புடன் விளங்கியது தெரியவருகிறது. கருவாழக்கரை என்ற ஊரின் உட்கிராமமாக இருந்து வருகிறது.

பிற்சேர்க்கை - II

# காவிரியின் தென்கரையில் செம்பியன் கண்டியூரைச் சுற்றியுள்ள ஊர்களின் தொன்மை வரலாறு

முனைவர் **தி. சுப்பிரமணியன்**
தொல்லியல் அலுவலர்
தருமபுரி
திரு. **ச. பரணன்**
காப்பாட்சியர்,
கங்கை கொண்டசோழபுரம்

## *செம்பியன் கண்டியூர்:*

செம்பியன் கண்டியூரில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இங்குள்ள தோப்பு மேடு என்ற பகுதியில் தாழியின் ஒரு பகுதி இருப்பது வெளியில் தெரிந்தது. இந்த தாழியை தோண்டி எடுக்கும் பணி செய்யப்பட்டது. தாழியின் அடிப்பகுதி உடைந்த நிலையில் இருந்தது. இதன் அருகில் சிவப்பு நிற பானை ஒன்று நல்ல நிலையில் இருந்தது. தாழியைச் சுற்றிலும் வைக்கும் படையல் மட்கலங்களில் இதுவும் ஒன்று.

இந்த சிவப்பு நிற பானையின் உட்பகுதியில் முழுவதும் மண் இருந்தது. இந்த மண்ணை சுத்தம் செய்தபோது இப்பானை உடைந்துவிட்டது. இப்பானையின் உட்பகுதியில் 9 மட்கலங்கள் நல்ல நிலையில் இருந்தன. இவற்றில் கிண்ணம், மூடிகள், செப்பு போன்றன இருந்தன. இவற்றில் 6 மட்கலங்கள் கருப்பு சிவப்பு மட்கலங்களின் வகையையும் மற்றவை சிவப்பு நிற மட்கலங்களின் வகையையும் சேர்ந்தவை.

## *குறியீடுகள்:*

படையல் பொருட்களாக வைக்கப்பட்ட மட்கலங்களில் 7ல் குறியீடுகள் காணப் படுகின்றன. இவை மட்கலங்களின் வெளிப்பகுதியில் கீறி குறியீடு செய்யப்பட்டுள்ளன. பெரும்பாலான குறியீடுகள் கருப்பு சிவப்பு மட்கலங்களில் உள்ளன. செம்பியன்

கண்டியூரில் கிடைத்த குறியீடுகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம் அவை களாவன:

குறியீடுகள்

1. முதல்வகை : தனிக்குறியீடுகள் ↑ ↑

2. இரண்டாம் வகை : இரண்டு குறியீடுகள் A1

3. மூன்றாம் வகை : இரண்டுக்கும் மேற்பட்ட இணைந்த குறியீடுகள் # #

பெருங்கற்காலச் சின்னங்களிலும் ஊர் இருக்கைகளிலும் கீறல் குறியீடுகள் காணப்படுகின்றன. செம்பின் கண்டியூரில் கிடைத்த குறியீடுகளில் சில ஆழமாகவும் சில ஆழமின்றியும் கீறி குறியீடுகளைச் செய்துள்ளனர். குறியீடுகள் மற்ற குறியீடுகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

### *சித்தர் காடு:*

இங்கு சீர்காழி சிற்றம்பல நாடிகள் கோயிலும், உரிகட்டி சாமி கோயிலும் உள்ளன. இங்கு 64 சித்தர்கள் ஜீவசமாதி அடைந்தனர் என்றும் இதனால் இதற்கு சித்தர் காடு என்ற பெயர் வந்தது என்றும் கூறப்படுகின்றது. உரிகட்டி சாமி கோயில் என்பதும் சித்தர் சமாதியான இடம் என்றும் இங்கு அவருக்கு கோயில் ஒன்றும் எடுக்கப்பட்டுள்ளது.

### *மயிலாடுதுறை:*

மயிலாடுதுறையில் பழங்காவேரி என்ற பெயரில் இரண்டு பகுதிகள் காணப்படுகின்றன. தற்போது ஓடுகின்ற காவேரி இவைகளுக்கு வடக்கில் ஓடுகின்றது. முதலில் காவேரி மூவலூர் என்ற இடத்திலிருந்து தெற்காகவும் இரண்டு பிரிவாகவும் ஓடியுள்ளது. பிற்காலத்தில் இக்காவேரி ஆற்றில் வேகத்தாலோ அல்லது செயற்கையாகவோ இடம் மாறி ஓடியுள்ளது. பழங்காவேரி ஓடிய பகுதிகள் இன்றும் பழங்காவேரி என்ற பெயரிலே அழைக்கப்படுகின்றன.

தற்போது இந்த பகுதிகள் இரண்டும் மூடப்பட்டு, கழிவுநீர் செல்லும் வாய்க்காலாகத் தோற்றம் அளிக்கின்றது. நாஞ்சில் நாடு என்ற பகுதியில் கண்டெடுக்கப்பட்ட செங்கற்கள் மற்றும் குழாய் ஓடுகள் பழங்காவேரியின் கரையில் கிடைத்துள்ளன. எனவே பழங்காவேரி என்பது இப்பகுதியில் முதலில் ஓடியுள்ளது என்பது தெரியவருகின்றது. இதனுடைய முதல் பிரிவு மயிலாடுதுறையின் மையப்பகுதியில் ஓடியுள்ளது. இன்றும் பொதுப்பணித் துறையினர் இதை பழங்காவேரி I என்றும் பெயரிட்டுள்ளனர்.

நாஞ்சில் நாடு என்ற பகுதியில் கண்டெடுக்கப்பட்ட செங்கற்கள் சங்க காலத்திய செங்கற்களை போன்று காணப்படுகின்றன. சங்க காலத்தில் பூம்புகாரில் பயன்படுத்தப்பட்ட

செங்கற்களைப் போன்றன என்பதால் காவேரி ஆறு சங்க காலத்தில் மயிலாடுதுறையில் இரண்டு பிரிவுகளாக ஓடியுள்ளது என்பது தெரியவருகின்றது. பின்னர் இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ மேலும் வடக்கில் மாறி ஓடியுள்ளது என்று கூறலாம்.

### நாஞ்சில் நாடு:

நாஞ்சில் நாடு என்பது தற்போதைய மயிலாடுதுறையின் ஒரு பகுதியாகும். இப்பகுதியில் பழங்காவேரி ஓடியுள்ளது என்பது இப்பகுதியில் காணப்படும் எச்சங்களைக் கொண்டு கூறமுடிகின்றது. பழங்காவேரியின் கரையில் தற்போதுள்ள புனுகீஸ்வரர் கோயில் அமைந்திருக்க வேண்டும். மயிலாடுதுறையில் ஓடுகின்ற காவேரி தற்போது வடக்கில் ஓடுகின்றது. பழங்காவேரியின் வேகத்தாலோ அல்லது விவசாயத்திற்காகவோ இது மாறி இருக்கலாம்.

நாஞ்சில் நாடு என்ற பகுதியில் இரண்டு ஏரிகளைப் போன்ற பள்ளமான பகுதிகள் காணப்படுகின்றன. இந்த இரண்டு இடங்களிலும் தற்போது செங்கல் சுடும் சூளைகள் உள்ளன. இங்கு செங்கல்லுக்கு மண் எடுக்கும் போது சங்க காலத்தைச் சார்ந்த செங்கற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த செங்கற்கள் பெரிய அளவிலும் நன்கு சுடப்பட்டும் உள்ளன. இங்கு மூன்று வகையான செங்கல் உடைந்த நிலையிலும் நல்ல நிலையிலும் சேகரிக்கப்பட்டுள்ளன. பெரிய செங்கற்கள் 34X21X7 செ.மீ. அளவிலும் 32X19X6 செ.மீ. அளவிலும் உள்ளன.

சுடுமண் குழாய்கள் இரண்டு கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று உடைந்துவிட்டதாகவும் நல்ல நிலையில் ஒன்றும் சேகரிக்கப்பட்டுள்ளது. இக்குழாயின் ஒரு பக்கம் தடித்த வாய் பாகமும் (Rim Portion) மறு பக்கம் சாதாரணமாகவும் செய்யப் பட்டுள்ளது. இக்குழாயின் நீளம் 29 செ.மீ. விட்டம் 35 செ.மீ. என்ற அளவில் உள்ளது. இதைப் போன்ற மற்றொரு குழாய் இதனுடன் இணைந்துள்ளது அவை உடைந்து விட்டதாகக் கூறப்படுகின்றது. இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று இணைத்து வைக்கப் பட்டிருக்க வேண்டும் என்று கூறலாம்.

இக்குழாய்கள் இருந்த இடங்களுக்கு அருகில் செங்கற்கள் பரப்பப்பட்ட தரை பகுதி இருப்பது தெரியவந்துள்ளது. தரையில் இரண்டு செங்கற்களின் வரிசைகள் உள்ளன. அவை ஒன்றின் மேல் ஒன்று அடுக்கிய நிலையில் இத்தரை காணப்படுகின்றது. இந்த செங்கற்களுக்கு இடையில் சாந்து போன்ற மண் காணப்படுகின்றது. இத்தகைய தரை எதுவரை பரவியுள்ளது என்பதை தெரிந்து கொள்ள இயலவில்லை. இருபினும் தரையும் குழாயும் பழங்காவேரி எனப்படும் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதைப் போன்ற செங்கற்கள் சிறிது தூரம் தள்ளி மற்றொரு இடத்திலும் காணப்படுகின்றது. இந்த இரண்டு செங்கல் பகுதிகளும் பழங்காவேரி ஆற்றின் கரையில் இருந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது. மயிலாடுதுறையில் இரண்டு

இடங்களில் பழங்காவேரி என்ற பெயர் காணப்படுகின்றது. இப்பகுதியில் இன்றும் தாழ்வான பகுதிகள் உள்ளன. அத்தகைய பகுதிகளில் இந்த செங்கற்களால் அமைக்கப்பட்ட தளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இங்கு கண்டெடுக்கப்பட்ட செங்கற்களும், பூம்புகாரில் கண்டுபிடிக்கப்பட்ட படகு துறையில் உள்ள செங்கற்களும், நீர்த்தேக்கத்திற்கு பயன்படுத்தப்பட்ட செங்கற்களும் கிட்டதட்ட ஒரே அளவினை உடையதாக உள்ளன.

மேலும் நாஞ்சில் நாடு என்ற இப்பகுதியில் இவற்றைத் தவிர வேறு பானை ஓடுகள் கிடைக்கவில்லை. எனவே இங்கு ஓடிக் கொண்டிருந்த காவேரியின் கரையில் நீர்நிலை அல்லது நீர் தேக்கம் போன்ற ஒன்று அக்காலத்தில் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த நீர் தேக்கம் விவசாயம் போன்றவற்றுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கலாம். தண்ணீர் வேகமாக வருவதால் இப்பகுதி சேதமடையும் என்ற எண்ணத்தில் இப்பகுதியில் செங்கற்களைக் கொண்டு தாங்குதளம் அமைக்கப்பட்டிருக்கலாம். இங்குக் கிடைத்த செங்கற்களும் குழாயும் நல்ல நிலையில் உள்ளன.

### *முடிகண்ட நல்லூர்:*

முடிதிருச்சம்பள்ளியும் முடிகண்ட நல்லூரும் ஒன்றையடுத்து ஒன்று காணப்படுகின்றது. முடிதிருச்சம்பள்ளியில் ரேணுகாம்பாள் கோயில் ஒன்றுள்ளது. கிழக்கு நோக்கி இருக்கும் இக்கோயிலின் தூண்களில் இரண்டு கல்வெட்டுகள் சிதைந்த நிலையில் உள்ளன. பிற்காலத்தில் புதுப்பிக்கப்பட்டதால் இடம் மாறி உள்ளது. இக்கோயிலில் அம்மனின் தலைப்பகுதி மட்டும் வழிபாட்டில் உள்ளது. இந்த வழிபாடு மராட்டியர் காலத்தில் வந்திருக்க வாய்ப்புகள் உள்ளன.

முடிகண்ட நல்லூரில் சிவன் கோயில் ஒன்று உள்ளது. ரேணுகாம்பாளின் தலைப்பகுதி இப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டதால் முடிகண்ட நல்லூர் என்ற பெயர் வந்தது என்றும் அந்த முடி முடிதிருச்சம்பள்ளியில் வழிபாட்டில் உள்ளது என்றும் இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். இவை மராட்டியர் காலத்தில் ஏற்படுத்தப்பட்டவை என்பது தெரியவருகின்றது.

### *பழங்காவேரி:*

முடிகண்ட நல்லூருக்கு அருகில் பழங்காவேரி என்ற பகுதி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. காவேரி ஆறு மணல் குடி என்ற ஊரிலிருந்து பிரிந்து இரண்டாக ஓடியுள்ளது. தற்போதுள்ள காவேரி பழங்காவேரிக்கு தெற்கில் ஓடியுள்ளது. திசை மாறி ஓடிய காவேரி மீண்டும் காவேரியுடன் இணைந்து ஓடியுள்ளது. சுமார் 2 கி.மீ. தூரம் இந்த பழங்காவேரியின் பகுதி இன்று தாழ்வான பகுதியாகக் காணப்படுகின்றது. வெள்ள பெருக்கு ஏற்பட்டால் இன்றும் இதில் தண்ணீர் ஓடுவதாகக் கூறுகின்றனர். தண்ணீரின் வேகத்தாலோ அல்லது நீர் பாசனத்திற்காகவோ இது மாற்றப்பட்டிருக்கலாம்.

பழங்காவேரியின் வடகரையில் வரலாற்றுக் காலத்து மட்கலங்களின் ஓடுகள் கிடைக்கின்றன. இடைக்கால செங்கற்களும் சேகரிக்கப்பட்டுள்ளன. எனவே இப்பகுதியில் ஊர் இருந்திருக்க வாய்ப்புகள் உள்ளன.

### *புஞ்சை:*

இங்குள்ள நற்றுணை ஈஸ்வரர் கோயில் முற்கால சோழர்களின் கோயிலாகும். இங்கு ஆதித்த கரிகாலன் கல்வெட்டு முதல் பல சோழர்களின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கோயில் யானை பூசை செய்த இடம் என்று கூறப்படுகின்றது. இக்கோயிலிலுள்ள துர்க்கை சிற்பம் உயரமானது. இச்சிற்பத்துடன் சிம்மம் மற்றும் மான் ஆகிய இரண்டும் காட்டப்பட்டுள்ளது. மற்ற இடங்களில் இத்தகைய சிற்பம் இல்லை என்று கூறலாம். சோழர்கால கல்வெட்டுகள் இந்த ஊரை, 'திருநன்பள்ளி' என்று கூறுகின்றது.

இங்குள்ள மண் மேட்டில் பிற்கால பானை ஓடுகள் செங்கற்களில் துண்டுகள் சேகரிக்கப்பட்டன. இவை மராட்டிய மன்னர்களின் காலத்தவை.

### *கிடாரம்கொண்டான்:*

சோழர்கள் கடாரத்தை வெற்றி கொண்டதின் நினைவாக இந்த ஊர் அமைக்கப்பட்டு கடாரம் கொண்டான் எனப் பெயரிட்டிருக்க வேண்டும். சோழர் காலத்தில் சிறப்புற்றிருந்த இந்த ஊரின் பெயர் மருவி, தற்போது கிடாரம்கொண்டான் என்று கூறப்படுகின்றது. இங்கு பழைய மண் மேடு ஒன்று இருந்தது என்றும் அங்கு பழைய ஊர் இருந்தது என்றும் கூறப்படுகின்றது. இப்பகுதி முழுவதும் தற்போது நஞ்சையாக மாற்றப்பட்டுள்ளது. இப்பகுதியில் இன்றும் சோழர்கால பானை ஓடுகள், சுடுமண் பொருட்கள் கிடைக்கின்றன.

### *தலைச்சங்காடு*

தலைச்சங்காடு பற்றி மிகப் பழமையான இங்கு குறிப்புகள் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றன. மாடலன் என்ற மறையவன் வாழ்ந்ததை சிலப்பதிகாரம் கூறுகின்றது. ஞானசம்மந்தர், நாவுக்கரசர் ஆகியோரால் பாடல் பெற்ற ஊராகும். இந்த ஊரில் அருகிலுள்ள மயில் குளம் என்ற இடத்தில் தாழி வகையைச் சார்ந்த ஈமச் சின்னங்கள் காணப்படுகின்றன. இதை இப்பகுதி மக்கள் "மதமதக்காசால்" என்று கூறுகின்றனர். இங்குள்ள பள்ளியின் அருகில் சோழர் காலத்திய பானை ஓடுகளும், தொல்பொருட்களும் சேகரிக்கப்பட்டுள்ளன. 'ட' வடிவ கூரை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள திருமாலுக்கு "கடல் அமர்த்திய பெருமாள்" என்ற பெயர் கூறப்படுகின்றது. நின்ற நிலையில் உள்ள திருமாலுக்கு நான்கு கரங்களும் தலையின் மேல் பகுதியில் பிரபையும் காணப்படுகின்றது. சிற்பத்தின் இரண்டு பக்கங்களிலும் பூமாலை காட்டப்பட்டுள்ளது. இத்தகைய சிற்பம் மற்ற இடங்களில் காணப்படவில்லை. இந்த ஊரை சோழர் கால கல்வெட்டுகள், "ஜெயங்கொண்ட சோழவள நாட்டில், ஆக்கூர் நாட்டில் உள்ள தலைச்செங்காடு" என்று குறிப்பிட்டுள்ளன.

## கீழையூர்:

கீழையூரில் உள்ள கடைமுடியீஸ்வரர் கோயிலின் வடக்கில் உள்ள மண்மேட்டில் பழைமையான ஊர் இருந்ததற்கான தடையங்கள் காணப்படுகின்றன. சோழர் கால செங்கற்கள் மற்றும் இடைக்கால மட்கலங்களின் ஓடுகள் போன்றன சேகரிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள கோயில் ஞானசம்மந்தரால் பாடல் பெற்ற ஊர். இக்கோயில் மேற்கு நோக்கி காணப்படுகின்றது. சோழர்காலக் கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன. இது சோழர் காலத்தில் சிறப்புற்ற நகரமாக விளங்கியுள்ளது.

கீழையூரில் வாழைத்தோப்பு என்ற பகுதியிலும் ஒரு பெரிய மண்மேடு காணப்படு கின்றது. இங்கு கோயில்களின் இடிபாடுகளும் பைரவர், சண்டேஸ்வரர், இலிங்கம் போன்ற உதிரி சிற்பங்களும் உள்ளன. செங்கற்களால் கட்டப்பட்ட கோயில் இடிபாடுகளுடன் காணப்படுகின்றது. இக்கோயில் கி.பி. 17, 18–ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம். பூம்புகாரின் ஒரு பகுதியாக கீழையூர் இருந்துள்ளது என்பதும் தெரியவருகின்றது.

## மேலப்பெரும்பள்ளம்:

மேலப்பெரும்பள்ளத்தில் உள்ள தொரவாடி (தொரவடி) என்ற இடத்தில் பெரிய மண்மேடு காணப்படுகின்றது. இந்த மண்மேட்டில் பெருங்கற்காலத்தைச் சார்ந்த தாழிவகை ஈமச்சின்னங்கள் காணப்படுகின்றன. இதற்கான தடையங்கள் மண்மேட்டில் மேற்பரப்பிலே கிடைக்கின்றன. கருப்பு சிவப்பு மட்கலங்களின் ஓடுகள், கருப்பு நிற ஓடுகள், சிவப்பு நிற மட்கலங்களின் ஓடுகள் ஆகியன சேகரிக்கப்பட்டன. இங்கு பெருங்கற்கால மக்களின் வாழ்விடமும் ஈமச்சின்னங்கள் அமைந்த இடங்களும் இணைந்து காணப்படுகின்றன.

வீராளி தோட்டம் என்ற மற்றொரு மண்மேடு சுமார் 3 மீ. உயரமுடையது. இந்த மண் மேட்டிலும் பெருங்கற்காலத்தைச் சார்ந்த மட்கலங்களின் ஓடுகளும் தாழியின் ஓடுகளும் காணப்படுகின்றன. விவசாயம் தொடர்பாக இப்பகுதியில் இந்த மண்மேட்டைத் தவிர மற்ற பகுதிகள் முற்றிலும் மாற்றப்பட்டுவிட்டன. இப்பகுதியில் சுமார் 2500 ஆண்டு களுக்கு முன்பிருந்து மக்கள் வாழ்ந்ததற்கான தடையங்கள் காணப்படுகின்றன. இங்கிருந்து சேகரிக்கப்பட்ட பெண்களின் உருவங்களுடன் கூடிய முதுமக்கள் தாழிகளின் உடைந்த பகுதிகள் தொல்லியல் துறையின் பூம்புகார் அகழ்வைப்பகத்திலும், சென்னை தலைமை அலுவலகக் காட்சிக் கூடத்திலும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

**திருவலம்புரம்:** என்ற இடத்திலுள்ள வலம்புரிநாதர் கோயிலின் வடதிசையில் மண்மேடு ஒன்று காணப்படுகின்றது. இந்த மண்மேட்டில் கோயில் தூண்களும், யாளி மற்றும் பூத கணங்களின் வரிகள் ஆகியன உரியாக உள்ளன. இந்த மண்மேட்டில் இடைக்காலத்தைச் சார்ந்த பானையின் ஓடுகளும், செங்கல் துண்டுகளும் கிடைக்கின்றன. எனவே இப்பகுதியில் சோழர் காலத்தில் ஊர் இருக்கை ஒன்று இருந்தது என்பது தெரியவருகின்றது. இங்குள்ள வலம்புரி நாதர் சிவன் கோயில் மூவரால் பாடல் பெற்ற ஊர்

பல்லவர் காலம் முதல் இப்பகுதி சிறப்புற்றிருந்தது. இதற்கு உதாரணமாக "வட்டணைப்பட நடந்தநாதர்" என்ற செப்புத்திருமேனியைக் கூறலாம். எரகண்ட முனிவர் என்ற சித்தர் காலமான இடம் என்பதால் சமாதி கோயில் ஒன்றும் உள்ளது.

### விளநகர்:

இக்கிராமம் காவிரியின் தென்கரையில் அமைந்துள்ளது. இவ்வூரில் ஸ்ரீ துறை காட்டும் வள்ளலார் என்ற சிவன் கோவில் ஒன்றுள்ளது. (குத்தாலம் தொடங்கி மேலப்பெரும்பள்ளம் முடிய உள்ள காவிரியின் தென்கரைப் பகுதி) மற்றும் வரதராசப் பெருமாள் கோயிலும் ஒன்றாகும். இக்கோவிலருகே காவிரியிலிருந்து விரிந்து வரும் சத்தியவாணன் வாய்க்கால் ஓடுகின்றது. இவ்வாய்க்கால் தருமபுரம் அருகே காவிரியிலிருந்து பிரிந்து விளநகர் மேலகட்டளை, வல்லம், முக்குரும்பூர் கிராமங்கள் வழியாக ஓடுகின்றது.

மேற்காணும் பெருமாள் கோயிலில் கி.பி.12-13-ஆம் நூற்றாண்டினைச் சார்ந்த சுமார் 10 அடி உயர விஷ்ணு கற்சிலை, தன் இரு தேவியர்களுடன் பின்னமான நிலையில் கோயிலின் உள் மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது. இவ்வூரினை தென் காஞ்சி என்றும் புராணக் காலத்தில் ஜயிஷவிய முனிவன் வழிப்பட்டதாகவும் இவ்வூரார் கூறுகின்றனர். தொல்பொருள்கள் ஏதும் காணப்படவில்லை.

விழல் நகர் என்பது விளநகர் என மருவி வழங்குகிறது. (விழல் என்றால் நாணல்)

### ஆறுபாதி கிராமம்:

விளநகர் காவிரியின் தென்கரையினையொட்டி சுமார் 2 கி.மீ. தொலைவில் ஆறுபாதி கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் கரை சாத்த விநாயகர் கோயில் ஒன்றுள்ளது. தொல்பொருள்கள் ஏதும் காணப்படவில்லை.




### மேலைப்பறியலூர்:

ஆறுபாதி கிராமத்திலிருந்து தெற்கு பகுதியில் 2 கி.மீ. தொலைவில் மேலைப் பறியலூர் (இன்று மேலப்பரசலூர் என்கின்றனர்) கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் சிறிய சிவன் கோயில் ஒன்றுள்ளது. அதன் அருகே பிள்ளையார் குளம் எனும் பேரில் ஒரு குளம் உள்ளது. இவ்வூர் பெரியவர்கள், "புராண காலத்தில் தட்சன் யாகம் வளர்த்தபோது பிள்ளையார் இக்குளத்தினருகே அமர்ந்திருந்ததாகவும் அதனால் இக்குளம் பிள்ளையார்

குளம் என்றும் வழங்கப்படுகின்றன. இவ்வூர் சிவன் கோயில் குருக்களான சிவலோக நாதர் என்பவரும் இக்கருத்தினைத் தெரிவித்துள்ளார்.

## *கீழ்ப்பறியலூர்: (கீழ்பரசலூர்)*

இவ்வூரிலுள்ள சிவன் கோயில், சிவனின் எட்டு வீரட்டானங்களில் ஒன்று ஆகும். தேவாரப் பாடல் பெற்ற ஊராகும். புராணக் கதையின் தொடர்ச்சியாக இத்தலம் தட்சன் யாகம் வளர்க்க, அதன் பயனாக சிவனுக்கு அவிர் பாகம் தர மறுத்ததால் அவனை அழித்ததாகக் கூறுகிறது. இதனை இக்கோயிலின் தென்பகுதி சுவர்களில் தட்சன் கதையினைக் கல்லில் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கியுள்ளனர்.

## *முடிவுரை:*

செம்பொன்னார் கோவிலருகே அமைந்துள்ள முடிதிருச்சம்பள்ளி கிராமத்தில் பழங்காவிரியின் தடயமும், இப்பழங்காவிரி மணல்குடி அருகேயிருந்து ஓடி வந்துள்ளதும், தற்போது காவிரி பாசன வசதிக்காகவோ அன்றி காவிரியின் நீர்ப்பெருக்கினாலோ தடம் மாறி இன்றும் ஓடும் பாதையில் செல்கின்றது.

மேற்படி காவிரியின் தென்கரை ஆய்வின் போது, காவிரியின் இருமருங்கிலும் முதுமக்கட் தாழியின் உடைந்த பகுதிகளும், பானை ஓடுகள், கறுப்பு சிவப்பு மற்றும் சிவப்பு நிற பானை ஓடுகள், ஆங்காங்கே விரவி காணப்படுகிறது. மேலும் மக்கள் அக்காலம் தொடங்கி வாழ்ந்ததற்கான தடயங்களும், மேலும் பல்லவர், மற்றும் சோழர் காலச் கற்சிலைகளும் உதிரிச் சிற்பங்களாகக் கிடைக்காததால் இங்கு சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த மக்கள் வாழ்விடமாக இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

## நாகப்பட்டின மாவட்டம் வரைபடம்



செம்பியன் கண்டியூர் அகழாய்வுக் குழியின் தோற்றம்





செம்பியன் கண்டியூரில் கிடைத்த சிந்து சமவெளி எழுத்துக் குறியீட்டுடன் கூடிய புதிய கற்காலக் கருவி (2006)



அகழாய்வுக் குழியின் தோற்றம் - செம்பியன் கண்டியூர்



சிந்துவெளி எழுத்துப் பொறிக்கப்பட்ட புதிய கற்காலக் கருவி கிடைத்த இடத்தினை முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர் பார்வையிடுதல் (2006)



அகழாய்வில் வெளிப்படுத்தப்பட்ட முழு வடிவப் பானை



அகழாய்வில் கிடைத்த குறியீட்டுடன் கூடிய முழுப்பானைகள்

செம்பியன் கண்டியூர்



அகழாய்வில் கிடைத்த குறியீட்டுடன் கூடிய முழுப்பானைகள்





அகழாய்வில் கிடைத்த குறியீட்டுடன்

# செம்பியன் கண்டியூர் அகழாய்வில் கிடைத்த தொல் பொருட்கள்



அகழாய்வில் கிடைத்த
புதிய கற்காலக் கைக்கோடாரி



சுடுமண் குமிழ் கைப்பிடி



அகழாய்வில் கிடைத்த
முழுவடிவிலான கருப்பு சிவப்பு கிண்ணங்கள்

## செம்பியன் கண்டியூர் அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்கள்



அகழாய்வில் கிடைத்த இரும்பு கத்தி



அகழாய்வில் கிடைத்த இரும்பு வளையம்



அகழாய்வில் கிடைத்த எலும்புத் துண்டுகள்



அகழாய்வில் கிடைத்த அலங்கரிக்கப்பட்ட பானை ஓடுகள்

மேற்பரப்பு ஆய்வில் கிடைத்த சுடுமண் குழாய்





செம்பின் கண்டியூர் மேற்கே கன்னியர் எழுவர் கோயில்
அருகே வாய்க்காலில் புதைந்திருந்த சோழர்கால சிற்பங்கள்



காவிரியின் வடகரையில் உள்ள ரெட்டிக்கடலங்குடி ஊரில்
கி.பி.9-10-ஆம் நூற்றாண்டு சிவலிங்கங்கள்